# தமிழரசு

16-1-1978 50 காசு.



சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக்
கட்டப்பட்டது!




- கண்கவர் வண்ணம்
- துல்லியமான பூச்சு
- அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
- காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது.
- அதிக உழைப்பு உறுதி
- கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

*மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:*

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.

# இந்த இதழ்




**வணக்கம் !**

தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் சிறப்பாகத் தமிழரசு வாசகர்களுக்கும், முகவர்களுக்கும் எங்கள் பொங்கல் நல்வாழ்த்துக்கள். இவ்வாண்டுப் பொங்கல்—மகிழ்ச்சிப் பொங்கலாக அமைந்திருந்தாலும்—சென்ற ஆண்டு இறுதியில் இயற்கையின் சீற்றத்தின் விளைவாக தமிழக மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை நினைக்கும் பொழுது—எத்தனை மகிழ்ச்சியிலும்—ஊடே ஒரு சோக இழை இழைந்தோடுவதை மறக்க முடியாது. புயல், வெள்ளத்தின் விளைவாக பயங்கரச் சேதம் ஏற்பட்டது. ஆனால், போர்க்கால அடிப்படையில் அரசு எடுத்த நிவாரணப் பணிகள், அல்லற்பட்டு மக்கள் ஆற்றாது அழுத கண்ணீரைத் துடைத்து—மீண்டும் மறுவாழ்வு அமைந்திட வித்திட்டு விட்டன எனலாம். அரசுக்கு உற்ற துணையாய், அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்குவதுடன், முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு வாரி வழங்கிட வேண்டுமென நல்லிதயம் படைத்தோர் அனைவரையும் கரம்கூப்பி வேண்டுகிறோம்.

இவ்வாண்டு பொங்கல் திருநாள், வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உலகப் பொதுமறை வழங்கிய வள்ளுவப் பெருந்தகைக்காக அரசே முதன் முறையாக விழா எடுத்த மாட்சியைக் கண்டு—தமிழ் கூறும் நல்லுலகமே வியந்து பாராட்டியது. எல்லாவற்றிற்கும் சிகரம் போல் அமைந்தது, திருவள்ளுவர் திருநாளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை. அவ்வுரையின் முழுவடிவத்தை இவ்விதழில் வெளியிடுவதில் 'தமிழரசு' பெருமை கொள்கிறது. திரைப்படத் திருவிழாவின் துவக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வரின் கலைநயமும், பொருட்செறிவும் நிறைந்த தலைமையுரையும் இவ்விதழில் இடம் பெறுகிறது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் 'தமிழுக்காக...' என்ற சிறப்புக் கட்டுரையும்—தலைசிறந்த எழுத்தாளர் திரு அகிலன் அவர்களின் பொங்கல் விழாக் கட்டுரையும் இவ்விதழின் சிறப்புக்கு மேலும் சிறப்பு அளிப்பனவாகும்.

குடும்பநலத் திட்டத்தின் பெருமையை இலக்கிய நயத்துடன் வலியுறுத்தும் கவிஞர் வேழவேந்தனின் கவிதை அனைவரையும் கவரும். மகளிர் அரங்கம் பகுதியில் வாழைக்காய், வாழைப்பழங்களிலிருந்து வகை வகையான உணவுகள் தயாரிக்கப்படும் முறை விளக்கப்பட்டுள்ளது.

நெல்லறுக்க நல்லதொரு கருவியைச் சந்திப்பதுடன், அருங்காட்சியகத்தில் அரிய இசைக் கருவிகளையும் உள்ளே காணவிருக்கிறீர்கள்.

நம்மை அண்டிப் பிழைக்கும் ஆடு வளர நாடும் வளரும் என்பதை ஒரு கட்டுரை விளக்குகிறது.

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்வதுடன், என்றும்போல் உங்கள் முழு ஒத்துழைப்பையும் 'தமிழரசு'க்கு அளித்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

மலர் : 8 16—1—1978 இதழ் : 14

## உள்ளே...


| | பக்க எண் |
|---|---|
| வரலாறு படைப்போம்! வறுமையை வெல்லுவோம்! ... | 2 |
| தமிழுக்காக...! ... | 7 |
| கல்வித் துறையின் 150 ஆண்டுகள் ... | 9 |
| உழைப்பின் திருவிழா ... | 14 |
| தமிழ்த் திரைப்படத் துறையின் வரலாறும் வளர்ச்சியும் ... | 17 |
| படமும் செய்தியும் ... | 22 |
| கட்டில் ஒலி நிறையட்டும்—கவிதை ... | 28 |
| நமது உணவில் வாழை (மகளிர் அரங்கம்) ... | 30 |
| திரைப்பட உலகின் தலைநகர் ... | 33 |
| தென்னகத்திலுள்ள ஸ்டுடியோக்கள் ... | 34 |
| அமெரிக்காவில் திறந்தவெளி அரங்குகள் | 35 |
| நெல்லறுக்க நல்லதொரு கருவி ... | 37 |
| யாரோ இவர் யாரோ? ... | 37 |
| அருங்காட்சியகத்தில் அரிய இசைக் கருவிகள் ... | 39 |
| ஆடு வளர நாடு வளரும் ... | 41 |
| சமுதாய வளர்ச்சிக்கு உதவும் சக்தி வாய்ந்த சாதனம் திரைப்படம் | 44 |



# வரலாறு படைப்போம்!

## திருவள்ளுவர் திருநாளில் முதல்வர் முழக்கம்

இன்றைக்கு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் திருநாள் நமக்கெல்லாம் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது. கட்சிச் சார்பற்ற முறையில், அரசியல் சார்பில்லாத நிலையில் நடைபெறும் இந்த நல்ல விழாவில் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கக் காரணமாயிருந்த கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாராட்டுகிறேன். குறைகள் — தவறுகள் நடந்திருக்கலாம். இப்படிப்பட்ட திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டதற்கும் அதற்குக் காரணமானவர்களுக்கும் பாராட்டுத் தெரிவிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வள்ளுவருக்குக் கோட்டம் அமைக்கப் பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்.

அண்ணா அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் தான் இங்கு வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது.

வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பெரிய மண்டபத்தில் பேசுகிறவர்களின் பேச்சுக்கள் எதிரொலிக்கின்றன. இதனால் கேட்பவர்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

எனவே, தமிழக அரசு இந்த மண்டபத்தை அழகாக, சீராக, சிறப்பாக, சரியாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நடைபெறும் இந்த விழா தமிழர் திருநாள். தமிழ் மொழிக்கும்— தமிழகத்திற்கும் சிறப்புச் சேர்க்கும் திருநாள். உலக மக்கள் அனைவரும் எப்படி வாழ வேண்டும் என்று வழி வகுத்துத் தந்த திருவள்ளுவரைத் தமிழகத்திற்குச் சொந்தமாக்கிடச் சென்னையில் மட்டும் விழா எடுத்தால் போதாது.

தமிழகத்தில் எல்லா நகரங்களிலும் ஊராட்சிகள், நகராட்சிகள், அரசுக்குச் சொந்தமான அமைப்புகள் — ஏன், பட்டி தொட்டிகள் எங்கும் வள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். கேட்டுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் உத்தரவே பிறப்பித்து இருக்கிறோம்.

வள்ளுவருக்கு—குறளுக்குச் சிறப்புச் சேர்க்க எண்ணுகிற அதே நேரத்தில், சென்னை நகரில் மட்டும் இந்த விழா நடைபெற்றால் இங்கே கூறப்படுகிற சில செய்திகள் மட்டும் பத்திரிகைகளில் வெளியாகும். முழுமையான கருத்தைத் தமிழகம் முழுவதிலும் உள்ள மக்கள் அறிந்து கொள்ள முடியாது.

எனவே, தமிழகம் எல்லாம், தமிழர்கள் வாழும் இடமெல்லாம் திருவள்ளுவர் திருநாளை நடத்தி, அதில் அறிஞர் பெருமக்களைப் பங்கு பெறச் செய்து, திருக்குறளின் பெருமையைப் பரப்ப வேண்டும் என்பதுதான் எங்களது பேரவா.

### உலகெங்கும் வள்ளுவருக்கு விழா

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்: 'வள்ளுவர் திருநாள் இங்கே மட்டும் சிறப்பாக நடைபெற்றால் போதாது. உலகமெல்லாம் வள்ளுவருக்கு விழா எடுக்க வேண்டும். அதுதான் எனது ஆசை' என்றார்கள். வாய்ப்புக் கிடைத்தால் சிலம்புச் செல்வரின் ஆசையைத் தமிழக அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்று கூறிக் கொள்கிறேன்.



# வறுமையை வெல்லுவோம்!!

அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் பாரிசில் உள்ள தமிழர்கள், அல்ஜீரியாவில் உள்ள தமிழர்கள் வள்ளுவர் திருநாளைக் கொண்டாட முடியும். திருவள்ளுவரைத் தமிழர்கள் உரிமை கொண்டாடினாலும், உலகம் முழுவதிலும் உள்ள நன் மக்கள் அனைவருக்கும் வள்ளுவருக்கு விழா எடுக்க உரிமை உண்டு.

**தமிழ் மொழியின் மறுமலர்ச்சி :**

தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் இங்கு தலைமை உரை நிகழ்த்தியபோது, தன்னுடைய ஆங்கிலப் பேச்சைத் தமிழிலே மொழி பெயர்த்துக் கூறும்படிக் கூறினார்கள். அந்த அளவிற்குத் தமிழ் மொழிக்கு நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே அறிஞர் பெருமக்கள்—கலைஞர்கள் பாராட்டப் பெற்றார்கள். கலைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. புலவர் பெரு மக்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டது. அதை உதவித் தொகை என்று சொல்ல மாட்டேன் காணிக்கை என்றுதான் சொல்வேன்.

**வறுமையில் வாட விட மாட்டோம்!**

இங்கே வழங்கப்பட்ட உதவித் தொகை நன்றாக வாழ்வதற்குப் போதுமானதா என்று கேட்கக் கூடும். நன்றாக வாழ்வதற்குப் போதுமானது இல்லைதான். அடையாளமாக — ஆரம்ப கட்டமாக — இந்த உதவித் தொகையை வழங்க முனைந்துள்ளோம். நிதி நிலைமை சீரானவுடன் போதுமான அளவிற்கு உதவித் தொகையை உயர்த்துவோம்.

**தமிழ் கற்ற—தமிழைப் பரப்புகிற—புலவர்கள் ஏழ்மையில் வாழ்ந்து தான் தீரவேண்டும் என்ற சமுதாய அமைப்பு இருக்குமானால் அதை மாற்றி அமைக்க இந்த அரசு பாடுபடும். தமிழ் கற்ற புலவர்களின் குடும்பமும்–சுற்றுச் சார்பும்–மகிழ்ச்சியோடு இருக்க நாங்கள் பாடுபடுவோம்.**

**தமிழ் கற்ற புலவர்களை தமிழக அரசு கைவிடாது. அவர்கள் வறுமையில் வாழ, இந்த அரசு இடம் கொடுக்காது என்பதையும் உறுதியோடு சொல்லிக் கொள்கிறேன்.**

எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்பதைச் சொல்லும் அளவிற்கு எனக்குத் தெரியாது.



*காலை நிகழ்ச்சியின் போது....*

எதிர்காலத்தைப் பற்றி ஆரூடம் கணிக்கின்ற நிமித்திகன் அல்ல நான். ஒன்றை மட்டும் நான் உறுதியாக நம்புகிறேன்.

**எதிர்காலத்தில் தமிழ் கற்றவர்களுக்கு— தமிழுக்குச் சொந்தக்காரர்களுக்கு—முதலிடம் அளிக்கப்படும். அப்படி அளிக்கப்பட்டால் நான் ஆச்சரியப்படமாட்டேன். அத்தகைய நிலை வர வேண்டும். தமிழ் கற்றவர்களுக்கு வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதே எனது ஆசை.**

இது இன்று நேற்று ஏற்பட்ட ஆசை அல்ல. நமது பெரியவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்ட குறிக்கோள்—இலட்சியமாகும். அந்த உரிமை—நம்பிக்கை செயல்பட நேரிடும்போது இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

**எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!**

தமிழில் விஞ்ஞானம் கற்றுத் தரும் நிலைமை உருவாக வேண்டும். ஆங்கிலத்தில் சொல்வது போலத் தமிழில் விஞ்ஞானச் சொற்களைச் சொல்ல முடியுமா என்று கேட்கும் நிலைமை மாறி வருகிறது.

**தமிழ் மொழியில் இலக்கியத்தை—வரலாற்றை—அறிவியலை—கணிதத்தை கற்றுக் கொடுக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும். "எங்கும் தமிழ்-எதிலும் தமிழ்" என்ற நிலை வர வேண்டும்.**

நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று நாம் கூறியதை மறந்து விடவில்லை. நீதிபதிகள் நன்றாக தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

நீதிபதிகள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் சொல்வதை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படிக் கூறுவது தமிழக மக்களின் உரிமை.

**"தமிழ் கற்றதால் நாம் என்ன கண்டோம்? அவல நிலையைத்தான் கண்டோம்" என்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும். யார் ஆட்சியில் இருந்தாலும் சரி, தமிழ் கற்றவர்கள் ஏழ்மையில் வாழக்கூடாது.**

**நாதசுரக் கலைஞர்களுக்கு உதவித் தொகை:**

ஒரு காலத்தில் நாதசுரக் கலைஞர்கள் 'கிராப்' வைக்கக் கூடாது என்றும், சட்டை போடக் கூடாது என்றும் நிலைமை இருந்தது. அதை அன்றைக்கே மாற்றிக் காட்டியவர் நாதசுர மேதை ராஜரத்தினம் பிள்ளை. அவர் சட்டை போட்டு 'கிராப்' வைத்து நாதசுரம் வாசித்தார். அந்தக் கலையில் அனைவராலும் பாராட்டும் வகையில் சிறப்புப் பெற்றார்.

ஒரு கலை, இந்தச் சாதிக்குத்தான் சொந்தம் என்பதை நாம் மாற்றியாக வேண்டும்.

எந்தக் கலையையும் — எந்தத் தொழிலையும் விரும்புகிற யாரும் செய்யலாம் என்ற நிலைமையை உருவாக்கிக் காட்ட வேண்டும்.

நாதசுரம் பயிலும் கலைஞர்களுக்கு 500 ரூபாய் உதவிப் பணம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். இதற்கு என்ன காரணம்? நாதசுரக் கலையில் யார், யாருக்குத் திறமை இருக்கிறதோ, ஆர்வம் இருக்கிறதோ, அவர்கள் கற்றுத் தேர்வதற்கு இந்தத் தொகை வழங்கப்படுகிறது.

ஏதோ பணம் கிடைக்கிறது. காலத்தைக் கடத்தலாம் என்று யாராவது நினைப்பார்களேயானால் அவர்கள் ஏமாந்து போவார்கள். யாரிடம் அவர்கள் நாதசுரக் கலையைப் பயில்கிறார்களோ, அவர்களுடன் நாங்கள் தொடர்பு வைத்துக் கொண்டிருப்போம். கற்றுக் கொள்ளும் கலைஞர் முறையாகப் பயிலவில்லை; அதில் அவருக்கு ஆர்வம் இல்லை என்று தெரிந்தால் உதவித் தொகை நிறுத்தப்பட்டு விடும். எதற்காகப் பணம் செலவழிக்கப்படுகிறதோ அது பலன் அளிக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

**தமிழறிஞர்களின் பெருமிதம்!**

அறிஞர் பெருமக்களுக்கு இங்கே ஓய்வு ஊதியம் அளிக்கப்பட்டது. அளிக்கப்பட்ட தொகை சிறு தொகை தான். அப்போது அவர்கள் முகத்தைக் கவனித்தேன். அவர்கள் முகம் மலர்ந்திருந்தது. வழங்கப்படும் தொகை காரணமாக அவர்கள் முகம் மலரவில்லை. நம்மையும் மதிக்கிறார்களே என்றுதான் அவர்கள் பெருமிதப்படுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

**தமிழ் படித்தவர்கள்—தமிழை வளர்ப்பவர்கள்—வீட்டில் கண் கலங்காமல் இருக்கும் நிலை உருவானால்தான், தமிழ் கற்ற அறிஞர்களுக்கு நாம் உரிய மரியாதையை அளித்திருக்கிறோம் என்று அர்த்தம்.**

*பழனி சிக்கல் நாதசுரக்கல்லூரிகளின்*



இங்கே பேசிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள், 'இரண்டு தலைகளும் ஒட்டி உறவாடுகிறது, அதைப் பிரிக்க முடியாது; பிரிக்கவும் கூடாது' என்று கூறினார்.

நாங்கள் ஒட்டிப் பேசியதில்லை. ஒன்றும் இரகசியம் இல்லை. இரகசியம் தமிழைப் பற்றியும், ம. பொ. சி. பேச்சைப் பற்றியும், நாட்டைப் பற்றியும்தான் நாங்கள் பேசினோம்.

**ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், இதுவரை தமிழகத்திற்குக் கிடைக்காத சிறப்புடையவராக நமக்குக் கிடைத்திருக்கிறார்.**

நான் இப்படிக் கூறுவதால் இதற்கு முன்பு இருந்த ஆளுநர்களைக் குறை சொல்வதாக அர்த்தமில்லை. ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்களைப் போற்றிப் புகழ்வதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இயற்கையின் சீற்றத்தால் தமிழகம் வரலாறு காணாத அளவிற்குப் புயல், வெள்ளக் கொடுமைகளுக்கு ஆளானபோது துயர் துடைப்புப் பணிகளில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது.

மக்களின் துயர் துடைப்புப் பணிகளுக்காக நாம் இங்கே நிவாரண நிதி திரட்டிக் கொண்டிருந்த நேரத்தில், குஜராத் மாநிலம் சென்று, தமிழ் மக்களுக்காக நிதி சேர்த்தார். பம்பாய்க்குச் சென்று நிதி திரட்டினார். பம்பாயிலிருந்து முதல் தவணையாக 25 இலட்சம் ரூபாய் அனுப்பி வைத்தார்.

தமிழ் மக்களின் துன்ப, துயரங்களில் இரண்டறக் கலந்து அவர்களுக்கு உதவுவதற்கு முன்வரும் ஆளுநரை எப்படிப் பாராட்டிடாமல் இருக்க முடியும்?

துன்ப துயரங்களிலிருந்து மக்களைக் கரை சேர்ப்பதில் நாங்கள் முனைந்து செயல்படுகிறோம். இதுதான் எங்கள் இருவருக்குமிடையே உள்ள உறவு. பொதுத் தொண்டு செய்யும்போது வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமளிக்கக் கூடாது.

### எதையும் தாங்கும் இதயம்!

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல எதையும் தாங்கும் இதயம் இருந்தாக வேண்டும் என்ற உறுதிப் பாட்டோடு கடமையாற்றி வருகிறோம். நம் உள்ளத்தைப் புண்படுத்தி, வேதனைப்படுத்தும் அளவிற்கு மற்றவர்கள் இகழ்ந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், மக்களிடம் எதைச் சொல்லி இங்கே வந்தோமோ அதை நினைத்து, அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றும் கடமை உணர்வோடு—பொறுமையோடு—செயல்பட்டு வருகிறோம்.

அவர்கள் எவ்வளவுதான் இகழ்ந்து பேசினாலும், எனக்குக் கோபத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்பினாலும் எனக்குக் கோபமே வராது; ஆத்திரம் ஏற்படாது.

மக்கள் எங்களிடத்தில் அதிகாரத்தை அளித்திருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்குத் துணையாக நிற்கிறார்கள். மக்கள் அளித்த அந்த அதிகாரத்தைத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காகவோ கோபதாபத்திற்காகவோ பயன்படுத்துவது எவ்வளவு தவறானது என்பது எங்களுக்குத் தெரியும்.

அப்படிச் சொந்த விருப்பு—வெறுப்புக்காக, சுயநலத்திற்காக, அதிகாரத்தைப் பயன்படுத்தினால் அது அக்கிரமக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் ஆகும். பொறுப்பு அதிகம் ஆக ஆக, பொறுமையை அதிகமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வள்ளுவர் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்.

### வள்ளுவரின் வரலாற்றை முறையாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

இங்கே பேசிய தமிழறிஞர்கள், ''அகர முதல எழுத்தெல்லாம் . . .'' என்ற குறளை வள்ளுவர் தொடங்கி முப்பாலையும் பாடி முடித்திருக்கிறார் என்றும், 'அகர முதல . . . என்று தொடங்கிய பாடல் கடவுளை முன்னிலைப் படுத்தியதாகும்' என்றும் கூறினார்கள்.

திருவள்ளுவரைப் பற்றி எத்தனையோ கதைகள் கேட்டிருக்கிறோம். சரியான வரலாற்றை நாம் அறிந்து கொள்ள முடியவில்லை. வள்ளுவர் கலப்பு மணம் புரிந்து கொண்டவர் என்றும், நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரிசைப்படுத்தி—வகைப்படுத்தி — அறிவுரை புகன்ற ஒரு மாபெரும் புலவரைப் பற்றிய வரலாற்றினை, சரியாக—முறையாக — நாம் தெரிந்து கொள்ள முடியவில்லை.

### உண்மை வரலாற்றை உருவாக்க வேண்டும்!

**தமிழகத்தின் உண்மையான வரலாற்றை தமிழ் அறிஞர்கள்—வரலாற்று ஆசிரியர்கள்— உருவாக்க முனைய வேண்டும். இரண்டாயிரம்**

*மாணவர்கள் அளித்த நாதசுர இசை நிகழ்ச்சி*



ஆண்டு தமிழகத்தின் வரலாற்றைப் படைக்க முடியாவிட்டாலும், முதலில், தமிழகத்தின் ஆயிரம் ஆண்டுகளின் வரலாற்றையாவது உருவாக்க முயலவேண்டும் என்று அறிஞர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் உண்மையான வரலாற்றைத் தயாரிக்க முனையும் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழக அரசு எல்லா வித உதவிகளையும் செய்யும். 5 ஆண்டுக் காலமோ அல்லது 10 ஆண்டுக் காலமோ பிடித்தாலும் நமது எதிர் காலச் சந்ததியினர் அறியும் வண்ணம் தமிழகத்தின் உண்மையான வரலாற்றினை நாம் தயாரித்தாக வேண்டும்.

குமரிக் கண்டம் இருந்த காலம் தொட்டுத் தமிழக வரலாற்றை அறிய நாம் விரும்புகிறோம்.

நமது வரலாறு, தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு, இன்னா நாற்பது என்று பேசலாம்.

இலக்கியம் தந்தவர்களை — அதற்கு வரைமுறை ஏற்படுத்தித் தந்தவர்களை — இலக்கணம் — நிகண்டு தந்தவர்களை நாம் மறக்கப் போவதில்லை. ஆனால் தமிழகத்தின் முந்தைய கால வரலாறு முழுமையாக இதுவரை இல்லை. அதை உருவாக்குவதில் தமிழ் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியைப் பயன் படுத்த வேண்டும்

தமிழ் இலக்கியங்களை—நூல்களை—ஒரு மாணவன் நூறு ஆண்டுக்காலம் படித்தாலும் படித்து முடிக்க முடியாது. அந்த அளவிற்கு தமிழ் இலக்கியம் நம்மிடம் நிறைந்திருக்கிறது.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை உருவாக இந்த அரசு பாடுபடும். கொள்கை அளவில் மட்டும் அல்ல, அதை நடைமுறைப் படுத்தவும் இந்த அரசு பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அமெரிக்காவிற்குச் செல்லும்போது அங்குள்ள தமிழக மக்களைச் சந்தித்து, அங்கு ஏற்கெனவே வள்ளுவர் மன்றங்கள் இருந்தால் சரி, இல்லாவிட்டால் இந்திய அரசின் துணையுடன் அங்கு புதிதாக வள்ளுவர் மன்றங்களைத் தொடங்கி வைக்க விரும்பி உள்ளேன்.

## தமிழ் வளர வளர, தமிழகம் செழிக்கும்!

நான் ஏற்கெனவே மொரீஷியஸ் நாட்டிற்குச் சென்றிருந்த போது அங்குள்ளவர்கள் தமிழ்ப் பற்றுள்ளவர்களாக இருப்பதைக் கண்டேன். அவர்கள் என்னிடம் தமிழ் இலக்கிய நூல்கள் அனுப்பி வைக்கும்படிக் கேட்டார்கள். நான் இங்கு வந்ததும் தமிழ் இலக்கிய நூல்களை அனுப்பி வைத்தேன். அந்த நூல்கள் என்ன காரணத்தினாலோ ஒன்றரை ஆண்டுகள் கழித்துக் கிடைத்திருக்கின்றன.

'தமிழ் வளர, வளர—உயர, உயர—இந்த நாடு செழிக்கும்' என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இங்கே பேசிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் 'இந்தியா தெய்வம், தமிழகத்தைத் தாய் என்று மதிக்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

தாயைத் தெய்வமாக மதிக்கிற நாம், தாய் மொழியாகிய தமிழ் மொழியைத் தெய்வமொழி என்று அழைப்பதில் தவறு இருக்க முடியாது என்று நினைக்கிறேன்.

எதிர்க் கட்சிகள் கொள்கையிலே மாற்றம் உள்ள கட்சியாக இருக்கலாம். ஆனால் எதிர்க் கட்சியாக இருந்து அழிக்கவும் ஒழிக்கவும் முனைந்தால் அது நாட்டுக்கு நல்லதல்ல.

மழை நீர் பூமிக்கு வந்து சேரும்போது நல்ல நீராகத்தான் வருகிறது. அது பூமிக்கு வந்தவுடன் எந்த மண்ணில் அந்த நீர் படுகிறதோ, அதற்கு ஏற்ப அந்த நீரின் நிறமும், தன்மையும் மாறுகிறது.

அதுபோல ஓர் அரசியல் கட்சியின் கொள்கை நல்ல கொள்கையாக இருக்கலாம். ஆனால் அந்த அரசியல் கட்சி சேருகிற இடத்திற்கு ஏற்ப அதன் கொள்கைகள் அமைகின்றன.

ஒரு மனிதனுக்கு நல்ல எண்ணம் வேண்டும். எப்போதும் கொள்கைப் பசி இருக்க வேண்டும்.

நல்ல குறிக்கோளும், இலட்சியமும் இருக்க வேண்டும். தன்னை எடைபோட்டுக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் எதிரியையும் எடை போட மறந்து விடக்கூடாது. மாற்றான் வலிமையை எடை போடத் தெரியாதவன் ஏமாறுகிறான்.

இலக்கியத்தை, இசையை, கலையை, நாட்டியத்தை, வரலாற்றை, அறிவியலை, சட்ட நுணுக்கத்தை வளர்க்க ஆஸ்தான புலவர்களைப் போல ஒவ்வொரு துறையிலும் வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே ஓய்வூதியம் அளிப்பதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழறிஞர்கள் தான் திறமையானவர்கள், தகுதியானவர்கள் மற்றவர்கள் திறமையும், தகுதியும் அற்றவர்கள் என்று யாரும் கருதிவிட வேண்டாம்.

இந்த ஓய்வு ஊதியத் திட்டத்தில் இடம் பெறாத எத்தனையோ அறிஞர் பெருமக்கள் திறமையும், தகுதியும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆரம்பக் கட்டமாக 5 பேரைக் குழு தேர்ந்தெடுத்துள்ளது!

தனிப்பட்ட முறையில் யாரையும் போற்றிப் பாராட்டி வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுபவன் நான் அல்ல.

மற்றவர்கள் எந்த வகையிலும் தகுதி குறைந்தவர்கள் அல்ல. அறிஞர் பெருமக்கள் அனைவரையும் ஒரே நோக்கோடு தான் நான் பார்க்கிறேன்.

## புலவர்களுக்குப் புதிய பொறுப்புகள் :

இப்போது ஓய்வூதியம் அளிக்கப்பட்டுள்ள ஐந்து எண்ணிக்கை, ஐம்பதாக, நூறாக உயரும்.

தமிழ் படித்து நொந்து போய் இருக்கும் புலவர்களுக்கு பல பொறுப்புகளை அளிக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

# தமிழுக்காக...

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. கா. காளிமுத்து



தமிழ் மக்களின் வாழ்வோடும் — வளத்தோடும் இரண்டறக் கலந்த — இயற்கையோடியைந்த இனிய திருநாள் பொங்கற் புது நாள். அந்த நாள் — தமிழ் மக்களின் விழா நாளாக மட்டுமின்றி — தமிழ் மொழிக்கும் விழா நாளாகி — மொழியின் ஏற்றம் பற்றியும் — அதற்காக நாம் இயற்றிட வேண்டிய கடமை பற்றியும் எண்ணிப் பார்க்கின்ற பயன்மிகு நன்னாளாக உருக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

''தாய் மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை. தாய் மொழியைப் புறக்கணித்து விட்டு வாழ்ந்த நாடும் இல்லை'' எனச் சொல்லப்படுகின்ற கூற்று — வரலாற்றுச் சான்றுகளோடு நிறுவப்படுகின்ற உண்மைக் கூற்றாகும். தமிழ் மொழி வரலாற்றையும் தமிழ்நாட்டு வரலாற்றையும் அருகருகே வைத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ் உயர்வு பெற்றுத் திகழ்ந்த காலம் நாட்டின் பொற்காலமாகவும் — பிற மொழி ஆதிக்கம் மேலோங்க தமிழ் தாழ்ந்திருந்த காலம்—நாட்டின் இருட் கால மாகவும் இருந்திருப்பதைத் தெளிவுற உணரலாம். ''வரப்புயர நீர் உயரும்' என்பது போல்—தமிழ் உயர்ந்தால் தமிழகம் உயரும்.

தமிழின் தகுதியை முற்றவும் — முழுக்கவும் உணர்வதோடன்றி, தமிழுக்குச் சிறப்பும்—செழுமையும்—பெருமையும் சேர்த்திடத் தக்க பெரு முயற்சிகளிலும் ஈடுபட்டாகவேண்டும். மொழி நூல் மூதறிஞர் தேவநேயப் பாவாணர் -உலகின் அனைத்து மொழிகளினும் எந்தவகையில் தமிழ் மேம்பட்டுப் பொலிகிறது என்பதற்கு பதினாறு சிறப்புகளைக் கூறுவதுண்டு. தொன்மை, முன்மை, எண்மை (ஒலி எளிமை) ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை —ஆகிய தகுதிகளைக் கொண்டது தமிழ்.

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழுக்குக்கொணர்ந்து —ஆக்க பூர்வமான முறையில் தமிழை உயர்த்திட வேண்டும். தேனினுமினிய — உலகையே உய்விக்கவல்ல நற்றமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்த்து வெளிநாட்டாரும் வணக்கம் செலுத்திடும் நிலையை உருவாக்கிட வேண்டும். இந்த இரண்டு இன்றியமையாக் கடமைகளுக்கும் தமிழக அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. வள்ளுவர் விழா அன்று — தமிழறிஞர் பெருமக்களுக்கு 'மான்யம்' வழங்கிய புரட்சித் தலைவர் அவர்கள் — 'இதனை உதவித்தொகை என்று கூற உள்ளம் ஒப்பவில்லை. இது தமிழுக்குச் செலுத்தும் காணிக்கை' என்றார். அரசு—தமிழுக்கு இயற்றுகின்ற நற்பணிகளைப் போன்றே ஒவ்வொரு தமிழ்க்குடி மகனும் — தமிழுக்காக நாம் என்ன செய்தோம் எனத்தன்னைத் தானே கேட்டுக் கொண்டு கடமையாற்றிட வேண்டும்.

''எங்கள் தமிழ் உயர்வென்று
சொல்லிச் சொல்லித்
தலை முறைகள்பல கழித்தோம்
குறை களைந்தோமில்லை
தகத்த காயத் தமிழைத்
தாபிப் போம்வாரீர்''

என்ற பாவேந்தரின் கவிக் கட்டளையை ஏற்றுத் தமிழுக்காக உழைப்போம்.

கன்னித் தமிழுக்குக் காணிக்கை —
கவிஞர் சுரதாவுக்கு உதவித்தொகை!



# திருவள்ளுவர் திருநாள்!

உலகப் பொதுமறை கண்ட திருவள்ளுவரின் திருநாள், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 15-1-'78 அன்று தமிழக அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முதன் முறையாக திருவள்ளுவர் திருநாளை அரசே முன்னின்று நடத்தியது, இவ்விழாவின் தனிச் சிறப்பாகும்.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் அன்று காலை நடைபெற்ற திருக்குறள் கருத்தரங்கினை துவக்கி வைத்ததுடன் மறைமலையடிகள் நூல் நிலையத்தின் சார்பில் அமைக்கப்பட்ட திருக்குறள் நூற்காட்சியினையும் திறந்து வைத்தார். டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். தமிழறிஞர்கள் பலர் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்

மாலை நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமை வகித்தார்கள். மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் தமிழறிஞர்களுக்குப் பாராட்டுரை வழங்கினார்கள். ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்று இவ் விழாவில் முழக்கமிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், திருவள்ளுவர் நினைவு நாள் திட்டங்களைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம் ஆகியவை சார்பாக வெளிவந்த திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் பதினைந்தை மக்களுக்குஅறிமுகப்படுத்தும் விதத்தில், மேலவைத் துணைத் தலைவரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

திருக்குறள் பற்றிய நூல் எழுதி சாகித்திய அகாடமி பரிசு பெற்ற திரு க. த. திருநாவுக்கரசு அவர்களுக்கும், ஞான பீடம் பரிசு பெற்ற தமிழ் எழுத்தாளர் திரு அகிலனுக்கும், இவ்விழாவில் முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்.

திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் எழுதிய திருவாளர்கள் மு. சண்முகம் பிள்ளை, ஜி. சுந்தரமூர்த்தி, தண்டபாணி தேசிகர், மு. கோவிந்தசாமி, டாக்டர் முருகரத்தினம் ஆகியோருக்கு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார்கள்.

வறுமை நிலையில் உள்ள தமிழ் அறிஞர்களுக்கு மாதம் 100 ரூபாய் ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்து, இத் திட்டத்தின் கீழ், திருவாளர்கள் கவிஞர் சுரதா, மயிலை சீனி. வெங்கடசாமி, ஓ.மா. தியாகராசன், எஸ். ஏகாம்பரம், கே. ஜி. ராசு ஆகிய ஐந்து தமிழ் அறிஞர்களுக்கு ஒவ்வொருவருக்கும் நூறு ரூபாய் உதவித் தொகையை வழங்கினார்.


திருக்குறள் நூற்காட்சியில்

நாதசுரப் பள்ளிகளில் நான்கு ஆண்டுகள் பயின்று ஒரு நாதசுர வித்துவானிடம் 5 ஆண்டுகளுக்குப் பயிற்சிபெறும்கலைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தையும் முதல் அமைச்சர் துவக்கி வைத்தார். தருமபுரம் கோவிந்தராசனிடம் பயிற்சி பெறும் நாதசுரக் கலை மாணவன் செல்லத்துரைக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 500ஐயும், தவில் கலைஞர் சுப்பிரமணியத்திடம் பயிற்சி பெறும் தவில் கலை மாணவன் வரதராசனுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ரூபாய் 300ஐயும் முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

சிக்கல், பழனி ஆகிய ஊர்களில் உள்ள நாதசுரக் கல்லூரிகளில் பயிலும் திருவாளர்கள் சுப்பிரமணியம், வரதராசன், ராமதாஸ், சிவகுருநாதன் ஆகிய கலைஞர்களுக்கு முதல்வர் கைத்தறி ஆடைகளை அணிவித்துப் பாராட்டினார்.

தமிழ் இசையை ஓதும் ஓதுவார்கள் திருவாளர்கள் இலட்சுமணன், நாகநாதன், பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கு முதல்வர் பரிசுகள் வழங்கினார்

தமிழில் சிறந்த முறையில் வரைவுகளும் குறிப்புகளும் எழுதிய அரசு அலுவலர்களுக்கு, விழாவில் ரொக்கப் பரிசுகளை முதல்வர் வழங்கினார். இத்திட்டத்தின் கீழ், திரு. பாலாஜி, திரு. மா. க. வேலாயுதம் ஆகியோருக்கு முதல் பரிசாக ஒவ்வொருவருக்கும் ரூ. 500ம் திரு கு. கிருட்டிணமூர்த்தி, திரு. வி. அறிவழகன் ஆகியோருக்கு இரண்டாவது பரிசாக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 300ம், மூன்றாவது பரிசாக திரு. லாரன்சுக்கு ரூபாய் 200ம் முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

மாலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு நடராஜ்-சகுந்தலா குழுவினரின் திருவள்ளுவர் நாட்டிய நாடக நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக அரசின் சார்பில், செய்தி—மக்கள் துறையினரால் நடத்தப் பெற்ற திருவள்ளுவர் விழா — எழுச்சிமிகு மகிழ்ச்சி விழாவாகத் திகழ்ந்தது.

# தமிழகக் கல்வித்துறையில் 150 ஆண்டுகள் (1826—1977)

—டாக்டர் லாரன்ஸ்,
பள்ளிக் கல்வி இயக்குநர்.

**த**மிழக கல்வித்துறை சீரிய முறையில் விரிவடைந்ததுடன், செயல்களிலும் துரித கதியுடன் கடந்த 150 ஆண்டுகளில் விரிவடைந்துள்ளது. அந்நாளைய மேதகு ஆளுநராக இருந்த சர் தாமஸ் மன்றோ அவர்களின் ஆணைக்கிணங்க நடத்தப்பட்ட கல்விக் கணக்கெடுப்பின் மதிப்பீட்டிற்குப் பிறகு, 1826-ஆம் ஆண்டு சென்னையில் ஒரு கல்வி வாரியம் அமைக்கப்பட்டது. இத்துறை படிப்படியாக வளர்ந்து துளிர்விட்டு, கிளைவிட்டுத் தழைத் தோங்கி இயங்கி வருகிறது. 1840-ல் சென்னை மேதகு ஆளுநராக இருந்த லார்டு எல்பின்ஸ்டன் அவர்கள், திரு ஜார்ஜ் நார்ட்டன் அவர்களை உயர்நிலைப் பள்ளிகளின் தலைவராகக் கொண்ட ஒரு பல்கலைக்கழக வாரியத்தை அமைத்தார். திரு வுட் அவர்களின் 1854-ஆம் ஆண்டு பரிந்துரைக்கேற்ப (Wood's Despatch) சர். ஏ. ஜே. அர்புத் நாட் அவர்களைத் தலைவராகக் கொண்ட பொதுக் கல்வித்துறை அவ்வாண்டில் தோற்றுவிக்கப் பட்டது.

ஹண்டர் குழுவின் (Hunter Commission) பல்வேறு பரிந்துரைகளை 1880 முதல் 1892 வரை பொதுக் கல்வி இயக்குநராக இருந்து உடற்பயிற்சிக் கல்விக்கு வித்திட்ட திரு ஹென்றி பைட்வெல் கிரீக் (Mr. Henry Bidowell Grigg) செயல்படுத்தினார். 1892 முதல் 1899 வரையில் பொதுக் கல்வி இயக்குநராக இருந்த திரு டேவிட் டங்கன் (Mr. David Duncan) அவர்களைத் தலைவராகக் கொண்ட 12 அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு குழு, பள்ளிகளின் அங்கீகாரம், ஆசிரியரின் தகுதிகள் மற்றும் அவர்களுடைய ஊழிய நிலைகள் ஆகியவை பற்றிய விதிகளை மாற்றி அமைத்தது. திரு டங்கன் அவர்கள் இம் மாநிலத்தில் எல்லா மக்களின் கல்விக்கு (Mass Education) முன்னோடியாக இருந்து தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்தார். 1924-ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விக் கணக்கெடுப்பின் மதிப்பீட்டிற்குப் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் இலவச கட்டாயக் கல்வி புகுத்தப்பட்டது. 1936 முதல் 1944 வரை பொதுக் கல்வி இயக்குநராக இருந்த சர் மெவரல் ஸ்டேதம் பள்ளிகளில் விரயம், நிறைவுபெறாத தொடக்கப் பள்ளிகள் எண்ணிக்கை மற்றும் ஓராசிரியர் பள்ளிகள் ஆகியவற்றைக் குறைக்க ஊக்கமாகப் பாடுபட்டார். 1854 முதல் 1863 வரை தொண்டாற்றிய முதல் பொதுக் கல்வி இயக்குநரான சர் அலெக்ஸாண்டர் ஜான் அர்புத்நாட் முதல் 27 சிறந்த கல்வியாளர்களும் வல்லுநர்களும் இத்துறையை முன்னேற்றப் பாதையில் வழி நடத்தியிருக்கின்றனர். இவர்களுள் முதல் 13 இயக்குநர்கள் ஆங்கிலேயர். மற்றவர்கள் ஒரு பெண்மணி உட்பட இந்தியர்கள் ஆவர்.

வளர்ச்சி தொடர்ச்சியாக இருப்பினும், நாடு விடுதலை அடைந்த பிறகும், தமிழகம் அமைக்கப்பட்ட பிறகுமே விரிவு குறிப்பிடத் தக்கதாகவும், கண்ணைக் கவர்ந்து ஈர்க்கின்றதாகவும், சமீப காலத்தில் உள்ளது.

**தமிழகக் கல்வித்துறையின் 150-வது ஆண்டு நிறைவு விழாவில், 1977-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் மிக மிக அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் தங்கப் பதக்கங்கள் வழங்கினார்.**



## முன்னேற்றத்தின் புள்ளி விவரங்கள்

1956-ல் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்ட பிறகு பள்ளிக் கல்வி அடைந்துள்ள மிகப்பெரிய வளர்ச்சியின் அளவைப் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள எண்ணிக்கையை ஒப்புநோக்கி அறியலாம்.

| | | | 1956—57 | 1976—77 |
|---|---|---|---|---|
| 1. | தொடக்கப் பள்ளிகள் | ... | 22,608 | 27,306 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | ... | 64 | 5,730 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | ... | | |
| | ஆண்களுக்கு | | 725 | 2405 |
| | பெண்களுக்கு | | 169 | 469 |
| | | | 894 | 2,875 |
| 4. | தொடக்கப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் | ... | 26,74,596 | 57,52,279 |
| 5. | நடுநிலைப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் | ... | 1,28,510 | 15,49,867 |
| 6. | உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் | ... | 4,88,758 | 8,02,145 |
| | | | 32,91,864 | 81,04,291 |
| 7. | எல்லாப் பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர்கள் | ... | 1,08,874 | 2,51,717 |
| 8. | கல்விக்காக ஏற்படும் செலவு | ... | 11.8 கோடிகள் | 121.9 கோடிகள் |

பள்ளிக் கல்விக்காக 1977-78-ஆம் ஆண்டில் ரூபாய் 134.48 கோடி செலவிட திட்டமிடப்பட்டது. எல்லாக்கல்விக்காகவும் ரூபாய் 160 கோடி செலவிடப்படும். அரசினர் தமது மொத்த வருவாய்க் கணக்கில் சுமார் 24 விழுக்காட்டினை கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கம் செய்து வருகின்றனர்.

### ஆசிரியர் ஊதியம்

1960-ல் இருந்ததைக் காட்டிலும், ஆசிரியர்களின் சம்பளம் ஏறக்குறைய ஐந்து மடங்காக உயர்ந்துள்ளது. 1960-ல் ரூ. 45—90 வரிசையில் ஊதியம் பெற்ற ஓர் இடைநிலை ஆசிரியர், இப்பொழுது ரூ. 210—325 வரிசையில் ஊதியம் பெறுகிறார்.

பல்கலைக்கழக ஊதியக்குழு பரிந்துரைத்த சம்பள விகிதங்களில் ஆசிரியர் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### கல்வியின் முன்னேற்றம்

கல்வி முன்னேற்றத்தில் ஒரு முக்கிய சிறப்பு ஒவ்வொரு கல்வித் துறைக்கும், தனித் தனி இயக்குநர்கள் நியமிக்கப்பட்டதே ஆகும்.

1953-ல் சட்டக் கல்லூரித் துறையும்

1957-ல் தொழில் நுட்பக் கல்வித்துறையும்,

1965-ல் பள்ளிக் கல்வித்துறையும், கல்லூரிக் கல்வித்துறையும்,

1966-ல் மருத்துவக் கல்வித்துறையும்

1975-ல் அரசுத் தேர்வுத் துறை மற்றும் எஸ். சி. ஈ. ஆர். டி. யும்,

1976-ல் முறைசாராக் கல்வித்துறையும் தனியாகப் பிரிந்து ஒவ்வொன்றும் ஒரு இயக்குநரின் ஆளுமையில் இயங்கி வருகின்றன.

1966-67-ல் 148 கல்லூரிகளில் 97,000 மாணவர்களும் 4,900 ஆசிரியர்களும் இருந்தனர். தற்போது அவை 234 கல்லூரிகளாகவும், 211,000 மாணவர்களாகவும், 12,200 ஆசிரியர்களாகவும் அதிகரித்துள்ளனர். கல்லூரிகளுக்கான செலவு ஆண்டொன்றுக்கு 215 இலட்சங்களிலிருந்து 2,038 இலட்சங்களாக அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு மற்றத் துறை இயக்ககங்களிலும் காணப்படுகின்றது.

### சில முக்கிய குறிப்பிட்ட திருப்பு முனைகள்

இடைநிலைக் கல்வியை மாற்றியமைத்தல்,

முதியோர் இரவுப் பள்ளிகள்,

1948-ல் இயற்றப்பட்ட சென்னை பொது நூலகச் சட்டம்

1955-முதல் அமலாக்கப்படும் ஆசிரியர் ஒய்வூதியத் திட்டம்,

1959-ல் உருவான சென்னை ஆங்கில போதனுமுறை இயக்கம்,

1960-ல் உள்ளாட்சித் துறையின் கீழிருந்த தொடக்கநிலைப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் கொண்டு வரப்படுதல்,



1961-ல் ஆசிரியர்களுக்கான மாநில விருது வழங்கும் திட்டத் தொடக்கம்,

1964-65 கல்வி ஆண்டு முதல் இலவச உயர்நிலைப் பள்ளிப்படிப்பு,

1965-ல் மாநிலக் கல்வி நிறுவனம் நிறுவப்படல்,

1969-ல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நிறுவப்படுதல்,

1975-ல் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கான வாரியம் அமைக்கப்படுதல்,

1976-ல் 10+2+3 ஆண்டு கல்வி முறை தேர்ந்தெடுக்கப்படல் ஆகியவை யாவையும் இம்மாநிலத்தின் கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட திருப்பு முனைகளாகும்.

## பணியாளர் பெருக்கம்

1-11-1956-ல் இருந்த பணியாளர் எண்ணிக்கையையும் தற்போதுள்ள பணியாளர் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இத்துறையின் முன்னேற்றம் நன்கு புலப்படும்.

1-11-1956-ல் இருந்த 13 வருவாய் மாவட்டங்களில் 2 கோட்டப் பள்ளி ஆய்வர்கள் பணி புரிந்தனர். ஆனல் தற்போது 15 வருவாய் மாவட்டங்களுக்கு 12 முதன்மைக் கல்வி அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அதைப் போலவே 1-11-1956-ல் 15 மாவட்டக் கல்வி அலுவலர்களும், புதுக்கோட்டைத் தனி அலுவலரும், 2 ஆதாரக் கல்வி அலுவலர்களும், பணிபுரிந்ததற்கு தற்போது 48 மாவட்டக் கல்வி அலுவலர்களும்,

6 மகளிர் பள்ளி ஆய்வர்களுக்குத் தற்போது 7 மகளிர் பள்ளி ஆய்வர்களும்,

4 மண்டல உடற்கல்வி ஆய்வர்களுக்கு 16 மண்டல உடற்கல்வி ஆய்வர்களும்,

160 பள்ளித்துணை ஆய்வர்களுக்கு 402 பள்ளித்துணை ஆய்வர்களும்,

115 பள்ளி இளந்துணை ஆய்வர்களுக்கு 127 பள்ளி இளந்துணை ஆய்வர்களும் பணி புரிகின்றனர்.

இதைத் தவிர ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் ஆய்வர் ஒருவரும், உடற்பயிற்சிக் கல்வி முதன்மை ஆய்வர் ஒருவரும், உடற்பயிற்சிக் கல்வியில் சிறப்பு பெண் அலுவலர் ஒருவரும், பள்ளி மதிய உணவிற்காகத் தனி அலுவலர் ஒருவரும், இரண்டு களப்பணி அலுவலர்களும் பணி புரிகின்றனர். மேலும்,

1. இணை இயக்குநர்கள் மூவர்.
2. நிதிக்கட்டுப்பாடு அலுவலர் ஒருவர்.
3. நிர்வாக அலுவலர் ஒருவர்.
4. துணை இயக்குநர்கள் நால்வர்.
5. முதுநிலைக் கணக்கு அலுவலர் ஒருவர்.
6. உதவி இயக்குநர்கள் நால்வர்,

ஆகியவர்கள் இயக்குநர் அலுவலகத்தில் இயக்குநரகத்திலுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை பல்வேறு சிறப்புத் துறைகளில் செயல்பட வேண்டி இரட்டிப்பாகியுள்ளது.

## பள்ளித் தேவைகளின் நிறைவு

இந்தப் புற வளர்ச்சியுடன் நில்லாமல், கல்வி வசதிகளிலும் படிப்பக்கும் முறைகளி



லும், பயன்படுத்தும் போதனு உபகரணங்களிலும் பெரும்முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1958 முதல் பள்ளி உணவுத் திட்டம் பள்ளிகளில் அதிகக் குழந்தைகளைக் கொண்டு வந்து சேர்த்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு 'கேர்' நிறுவனம் பெருமளவில் உதவியுள்ளது. இன்று 20.25 இலட்சம் ஏழைக் குழந்தைகள் இலவச மதிய உணவு பெறுகின்றனர். இத்திட்டத்தின் மொத்தச் செலவு 4.80 கோடி ரூபாய் ஆகும். மதிய உணவு சமைக்க 97 மத்திய சமையற்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க ''உணவுப் பொருட் கிடங்குகள்'' அமைக்கப்பட்டுள்ளன. 224 உணவு ஊர்திகள் உணவைப் பள்ளிகளுக்கு எடுத்துச் செல்லுகின்றன. விக்கிரவாண்டியில், இயக்குநரகத்தின் கீழ், மதிய உணவு சமையல் கூடங்களைச் சார்ந்த ஊர்திகளுக்கான பழுதுபார்க்கும் தொழிற்கூடம் உள்ளது.



பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளின் வாயிலாகப் பள்ளிகளுக்கு வேண்டிய கட்டடங்களும் தளவாடங்களும் கிடைப்பது 1958 முதல் ஒரு வழக்கமான நிகழ்ச்சியாகிவிட்டது. இம் மாநாடுகள் வாயிலாகவும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் வாயிலாகவும் பெற்றோர் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பள்ளிகள் பயனடையத் தூண்டிவிடப்படுகின்றன. 1976-77 கல்வி ஆண்டு முடிய இத்தகைய 561 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டு 14.15 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உதவியைப் பள்ளிகள் பொதுமக்களிடமிருந்து பெற்றன. பள்ளி மாணவருடைய குழு உணர்ச்சியை, பள்ளிச் சீருடைத் திட்டம் வளர்த்துள்ளது. 1976-77 ஆண்டுவரை பொதுமக்கள் அளித்த 2.66 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பள்ளிச் சீருடைகளைப் பெற்று 40.46 இலட்சம் பள்ளிச் சிறுர்கள் பயன்பெற்றனர்.

நடப்பு ஆண்டில் 3429 உயர்நிலைப் பள்ளிகளிலும் 33,866 மற்றும் தொடக்க நிலைப் பள்ளிகளிலும் 74,68,857 ரூபாய் பெறுமானமுள்ள புத்தகங்கள் புத்தக வங்கிகளில் இடம் பெறுகின்றன. பொதுமக்கள் அளிக்கும் நன்கொடையால், எல்லாப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்க ஏற்படுத்தப்பட்ட தீவிர முயற்சி வியக்கத்தக்க விளைவை ஏற்படுத்தி 2,907 உயர்நிலைப் பள்ளிகளிலும், 5,341 நடுநிலைப் பள்ளிகளிலும், 21,289 தொடக்கநிலைப் பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் இயங்க வகை செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுமைக்கும், துப்புரவு இயக்கம் மேற்கொள்ளப்பட்டதால், பள்ளிச் சிறுர்கள் தங்களையும், தங்கள் பள்ளிகளையும் துப்புரவாக வைத்துக்கொள்ள இவ்வியக்கம் உதவியது. பள்ளி மாணவ மாணவியரின் உடல் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள கல்வித்துறை பல மருத்துவ ஊர்திகளை மாவட்டங்களில் அமைத்துத் தந்துள்ளது. இத்தகைய 20 மருத்துவ ஊர்திகள் இன்று பல மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. பள்ளிகள், கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் கிராமங்களை ஏற்று, சமூக சேவையைப் பணிவுடனும், உண்மையுடனும் செய்யத் தொடங்கியுள்ளன.

கிராமப் பள்ளிகளின் தேவைகளை, இயங்கும் அறிவியல் ஆய்வகம் நிறைவு செய்கின்றது. நடப்பு ஆண்டில் ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 36 கல்வி மாவட்டங்களில்



இத்தகைய இயங்கும் அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும் அறிவியல் கண்காட்சிகள், பொதுமக்களிடையே அறிவியலிலும் தொழில் நுட்பத்திலும் ஆர்வம் ஏற்படச் செய்துள்ளன. இந்த ஆர்வம், நகரங்களில் மட்டுமன்றி, தொலைவிலுள்ள கிராமங்களிலும் ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்காகப் பல பயிற்சிச் சாலைகளும் பணியிடைப் பயிற்சிகளும், அரசுக்குக் குறைந்த செலவில் அமைக்கப்பட்டதன் விளைவு எல்லாத் துறைகளிலும் தெளிவாகப் புலனுகின்றது. இம்மாநிலத்தில் இன்றுவரை 1728 பள்ளி இணைப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பள்ளிச் சிறுர்களிடையே சிறு சேமிப்பு உணர்ச்சியை வளர்க்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சியின்கீழ் 2,360 உயர்நிலைப் பள்ளிகளில் 6,44,546 மாணவ மாணவியர் 28,07,659 ரூபாய்களை இதுவரை சேமித்துள்ளனர். மாணவர்களின் அகமதிப்பீட்டுத் திட்டம் இம்மாநிலத்தில் மொத்தம் 688 உயர்நிலைப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கெனத் தனிப்பயிற்சி பெற்ற 1358 தலைமை ஆசிரியர்களாலும் பட்டதாரி ஆசிரியர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது,

### பெற்றோர் - ஆசிரியர் சங்கம் :

தமிழ்நாட்டில் 1964-65 கல்வி ஆண்டில் பெற்றோர் - ஆசிரியர் சங்கம் தொடங்கப்பெற்று இன்றைய நிலையில் 12,080 பள்ளிகளில் பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள் தொடங்கப்பெற்று, மத்திய சங்கத்துடன் இணைக்கப்பெற்றுள்ளன. இப்பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய முன்னேற்ற வழிகளை உருவாக்கிச் செயல்படுத்த உதவி வருகின்றன

### புதிய சாதனைகள் :

இம்மாநிலத்தில் 10+2+3 கல்வி முறையை ஏற்றுக் கொண்டமையும், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் பள்ளிக் கல்வித்துறையின் மேற்பார்வையில் வந்தமையும், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் பள்ளி ஆண்டை ஜூன் முதல் மார்ச் வரை என மாற்றி அமைத்தமையும், கட்டாய உடற்பயிற்சிக் கல்வி புகுத்தப்பட்டமையும், 1977 குடியரசு தின விழாவில் பள்ளிக் கல்வி அலங்கார ஊர்திக்கு முதற்பரிசு கிடைத்தமையும், 1977-ல் பள்ளி இறுதித் தேர்வில் மிகச் சிறந்த நிலை பெற்ற சிலருக்குப் பதக்கங்கள் வழங்கியமையும் இந்தச் சகாப்தத்தின் ஒளிர்கின்ற நிகழ்ச்சிகளாகும்.

இன்னும் சிறந்த கல்வியின் வாயிலாக, இன்னும் சிறந்த எதிர்காலத்தைப் பெற முதலமைச்சரிடமிருந்தும், கல்வி அமைச்சரிடமிருந்தும் இத்துறை தனது முடிவற்ற இயக்கத்திற்குத் தூண்டுதல் பெறுகிறது.

•

கடந்த 150 ஆண்டுகளாக மேம்பட்டு வந்த இத்துறையின் பணி தொடர்ந்து ஈடு செய்வதோடு அதனையும் மிஞ்சி மிகச் சிறந்த வெற்றியினையும் தொடர்ந்து பெறும் என்று உறுதியோடு நான் நம்புகின்றேன்.

## தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவர்கள்

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை 1939-ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. அப்போது இதன் முதல் தலைவராக இருந்தவர் சுதந்தரப் போராட்ட வீரரும், தேசியத் தலைவருமான திரு எஸ். சத்தியமூர்த்தி அவர்கள். அரசியலில் தீவிரப் பங்கு கொண்ட ஒருவர், கலைத் துறையிலும் ஈடுபாடு கொண்டு பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. இவர் 1939 முதல் 1941 முடிய இச்சபையின் தலைவராக இருந்தார்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவராக இதுவரை இருந்தவர்கள், அவர்கள் பணியாற்றிய காலமும் வருமாறு :—

| | |
|---|---|
| திரு எஸ். சத்திய மூர்த்தி .. .. | 1939—41 |
| திரு கே. சுப்பிரமணியம் .. .. | 1941—42<br>1947—49 |
| திரு எச். எம். ரெட்டி .. .. | 1942—43<br>1950—51 |
| திரு எஸ். எஸ். வாசன் .. .. | 1943—44<br>.. .. 1954—56 |
| திரு ஜி. இராமப்பிரம்மம் .. .. | 1944—45 |
| திரு எஸ். சௌந்தரராஜன் .. .. | 1946—47 |
| திரு டி. ஆர். சுந்தரம் .. .. | 1949—50<br>1956—59 |
| திரு ஏ. ராமய்யா .. .. | 1951—54 |
| திரு பி. நாகிரெட்டி .. .. | 1959—60<br>1964—66<br>1972—73 |
| திரு ஏ. எல். சீனிவாசன் .. .. | 1960—64<br>1966—67<br>1969—72 |
| திரு சுந்தர்லால் நஹாதா .. .. | 1967—69<br>1973—74 |
| திரு வி. சி. சுப்புராமன் .. .. | 1974—75 |
| திரு பி. புல்லையா .. .. | 1975—76 |
| திரு கே. ராஜகோபால் செட்டி .. | 1976—77 |
| திரு டி. வி. எஸ். ராஜு .. .. | 1977—78 |

# உழைப்பின் திருவிழா!

அகிலன்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் திருவிழா பொங்கல் விழாவாகும். இயற்கையின் துணையைக் கொண்டு, இயற்கையின் சோதனைகளை வென்று, மனித முயற்சி தன் உழைப்பின் வெற்றியால் பெற்ற பயனைக் கொண்டு உற்சாகமாகக் கொண்டாடும் விழா இது.

இந்த ஆண்டு எதிர்பாராத முறையில் புயலாலும் மழையாலும் வெள்ளத்தாலும் நாம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். மனிதர்களுக்கும் கன்றுகாலிகளுக்கும் உயிர்ச் சேதம், பயிர்பச்சை, தென்னை, வாழை முதலியவற்றின் பாதிப்பால் பொருட் சேதம் இவ்வளவும் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன.

இயற்கையின் இந்த அறைகூவலை எதிர்கொள்ளும் முறையில் அரசும் பொதுநல நிறுவனங்களும் தத்தம் கடமைகளைச் செய்து வருகின்றன. இது நமக்கு ஓரளவு ஆறுதல் அளித்து வருகிறது.

மனித இனம் போராடித்தான் வாழ வேண்டும். உழைத்துத்தான் வாழ வேண்டும். அந்த உழைப்பும் கூடிச் செய்யும் உழைப்பாக இருக்க வேண்டும். அந்தக் கூட்டு முயற்சியின் பயனை நாம் பகிர்ந்து அனுபவித்து வாழ வேண்டும். இதைத்தான் நமக்கு நம்முடைய பொங்கல் திருவிழா சொல்கிறது.

கவலைகளையும் துன்பங்களையும் களைப்பையும் சோர்வையும் நாம் மறக்க வேண்டுமல்லவா? வாழ்க்கையில் நம்மை நாமே புதுப்பித்துக் கொண்டு, மேலும் தீவிரமாக உழைக்க நமக்கு ஊக்கமும் உற்சாகமும் வேண்டுமல்லவா? —குதுகலமும் கோலாகலமும் நிறைந்த அந்த வாய்ப்பைத்தான் நமக்குப் பொங்கல் அளிக்கிறது.

பொங்கல் விழா சில தெளிவான அடிப்படைகளின் மீது கொண்டாடப்பெறுகிறது. அவற்றை இந்தச் சமயத்தில் நாம் நினைத்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

கதிரொளி, காற்று, தண்ணீர், நிலம் வானம் போன்ற இயற்கைச் செல்வங்களே நம்முடைய வாழ்வுக்கும் உழவுக்கும் தொழிலுக்கும் மூலாதாரங்கள் ஆகின்றன. சில சமயங்களில்—அண்மையில் நடந்தது போல் இயற்கையின் சீற்றங்களால் நமக்குச் சோதனைகள் விளைகின்றன என்றாலும், எப்போதும் நமக்கு உணவையும் கூரையையும் தருவன இயற்கைச் செல்வங்களே.

இயற்கைச் செல்வங்களிலேயே தலையாய செல்வமாக, தலைமைச் செல்வமாகக் கருதப்படுவது சூரியன். ஞாயிறையே உலகின் பல பாகங்களில் மக்கள் முழுமுதற் கடவுளாக வணங்கியிருக்கிறார்கள். நம்முடைய நாடு மட்டுமல்லாமல், ஐரோப்பாவின் பல பாகங்களிலுள்ள நாடுகளும் கதிரவனைப் போற்றி வழிபட்டு வந்திருக்கின்றன.

ஆகவேதான் நாமும் செங்கதிர் ஞாயிறைப் போற்றும் வகையில் இந்தப் பொங்கல் விழாவைக் கொண்டாடுகிறோம்.

நாம் விளைவித்த நெற்பயிரின் அறுவடை, நமது கரும்பு, மஞ்சள் யாவுமே மனிதர்கள் கூட்டாக உழைத்ததன் பயன்கள். உழவுத் தொழில் செய்யும் குடியானவர்களை மட்டும் நான் இங்குக் குறிப்பிடவில்லை. ஏர், கலப்பை, வண்டி முதலியன செய்யும் தச்சர்,





கொல்லர் முதலிய கிராமத் தொழிலாளர்களுக்கும் இதில் பங்கு உண்டு. ஆடு மாடுகள் போன்ற கன்றுகாலிகளையும் நாம் இச்சமயத்தில் மறக்க முடியாது.

அறுவடை முடிந்தவுடன் ஒவ்வொருவருக்கும் சேர வேண்டிய நெல்லை அளந்து கொடுக்கும் பழக்கம் கிராமங்களில் உண்டு. நான் சிறுவனாக இருந்தபோது எங்கள் கிராமத்திலேயே இப்படிப் பகிர்ந்தளித்ததைப் பார்த்திருக்கிறேன். கூடி உழைப்பதனால் விளையும் பயனை உழைப்பாளர்களிடம் நியாயமான அளவுக்கு நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். கூட்டுறவு மனப்பான்மையும் சமுதாய உணர்வும் இதனால் வளர வழியுண்டு. மனிதர்கள் தனித்து வாழ முடியாது. நாம் கூடி வாழப் பிறந்தவர்கள். நமக்குள்ளே இந்த மனித உறவு நன்கு வளர வேண்டுமானால், பயனைப் பகிர்ந்து கொள்வதில் ஓர வஞ்சனை இருக்கக் கூடாது.

நமக்காக உழைக்கும் மாடுகளையும் இந்த விழாவில் நாம் போற்றுகிறோம். மாடுகளுக்கென்றே ஒரு நாளை ஒதுக்கி மாட்டுப் பொங்கல் வைக்கிறோம். மாட்டுக் கொம்புகளுக்கு வண்ணந் தீட்டுதல், அவற்றின் கழுத்துகளில் குஞ்சம் கட்டுதல், 'மஞ்சி விரட்டாக' மாடு பிடித்து விளையாடுதல் போன்ற நிகழ்ச்சிகளில் நாம் உற்சாகமாக ஈடுபடுகிறோம்.

அரிசியோடு வெல்லமும் பாலும் நெய்யும் சேர்த்துச் சுவையாகப் பொங்குகிறோம். கருப்பஞ் சாற்றையும் சுவைக்கிறோம். பொங்கலுக்கு முன்பே, அதை வரவேற்பதற்காக வீடுகளில் உள்ள பழைய பொருள்களை நீக்கி விட்டு, அவற்றைக் கூட்டி மெழுகிப் புதுப்பிக்கிறோம். வெள்ளை அடிக்கிறோம். செம்மண் தீட்டுகிறோம். பின்னர் பொங்கலன்று புத்தாடை உடுத்து, புதுப் பொங்கல் உண்டு மகிழ்கிறோம். எவ்வளவோ இடர்ப்பாடுகள் எதிர்ப்பட்டாலும், நாம் அழகாகவும், கலை உணர்வோடும் சுவையாகவும் வாழத் தெரிந்தவர்கள் என்பதை நமக்கு இந்தப் பொங்கல் விழா வலியுறுத்துகிறது.

நம்முடைய நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு, வேளாண்மைத் துறையில்தான் இருக்கிறது. உழவுத் துறை உற்பத்தியின் பெருக்கமே மற்றத் துறைகளில் நம்மை வளரச் செய்யும். நம்முடைய நாட்டு மக்கள் அனைவரும் முதலில் பசிப் பிணியிலிருந்து விடுதலை பெறவேண்டியது அவசியம்.

வயிற்றுக்குச் சோறிட்ட பிறகுதான், கல்வியையும் பல பயிற்சிகளையும் மக்களுக்குத் தந்து அவர்களுடைய உழைப்பாற்றலை நம்மால் பெருக்க முடியும். பல்வேறு துறைப் பயிற்சி பெற்றவர்களின் உழைப்பால்தான் நாடு தீவிரமாக வளர்ச்சியுறும்.

இவ்வளவுக்கும் அடிப்படையாக இருக்கிறது இந்தப் பொங்கல் திருநாள். இந்த நன்னாளில் நாம் கூடி உழைத்து வளம் பெருக்கவும், பெருகிய பயனை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளவும், சுவையோடும் அழகோடும் வாழக் கற்றுக் கொள்ளவும் உறுதி எடுத்துக் கொள்வோம்.

# தமிழ்நாட்டில் வெள்ளம் மற்றும் புயல் நிவாரணப் பணிகளுக்கு உதவிட தமிழ்நாடு பரிசுச் சீட்டு முன்வருகிறது ...



சமீபத்தில் இம்மாநிலத்தில்
இயற்கையின்
சீற்றத்திற்கு உள்ளாகித்
தவிப்பவர்களுக்கு
நிவாரணமளித்திடும்
உயரிய பணிக்கு, 21-1-1978
அன்று நடைபெறவிருக்கும்
தமிழ்நாடு பரிசுச்சீட்டு சிறப்புக்
குலுக்கலின் மூலம் கிடைக்கும்
வருவாய் பயன்படுத்தப்படும்.

2 சிறப்பு முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. **5,00,000** வீதம்

3 சிறப்பு இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. **1,00,000** வீதம்

இதைத் தவிர ஒவ்வொரு வரிசைக்கும்

ரூ. **50,000** வீதம் இரண்டு முதல் பரிசுகள். மற்றும் பல பரிசுகள்!

**சிறப்புக் குலுக்கல் தேதி : 21-1-1978**

பரிசுச் சீட்டின் விலை ரூ. **1** மட்டுமே.

10 வரிசைகள்

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை 600 002

# தமிழகத் திரைப்படத் துறையின் வரலாறும் வளர்ச்சியும்!

அறிவியல் இந்த அகிலத்துக்கு உரு வாக்கித் தந்திருக்கும் அரும்பெரும் பேறு களில் ஒன்று சலனப்படம் ( Motion Picture ) என்று வழங்கப்படும் திரைப்படம் ஆகும்.

திரைப்படம் உருவாவதற்கு நாடகம்தான் அடித்தளம் என்றாலும் நாடகத்தில் கையாள முடியாத பல நுணுக்கங்களைத் திரைப்படத் தில் கையாள முடிவதால்-திரைப்படம் பொது மக்களிடம் மாபெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது.

நமது இந்திய நாடு ஆங்கில இனத்தவ ரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் நமக்கு எத்தனையோ துயரங்கள்-துன்பங்கள் ஏற்பட்டன என்றாலும், ஒரு சில நன்மைகள் விளையாமல் இல்லை. அத்தகைய நன்மைகளில் ஒன்றுதான் திரைப்படம்.

திரைப்படம் முதலில் கலையம்சமாக உரு வாக்கப்பட்டது என்றாலும் பின்னர் அது ஒரு தொழிலாகவே வளர்ச்சியடைந்திருக்கிறது. இன்று உலகத்தில், இந்தத் தொழிலில் ஈடு பட்டிருப்பவர்களின் தொகையை எண்ணிப் பார்த்தால் கோடிக் கணக்கில் இருக்கும் என்பது உறுதி.

மக்களுக்குக் குறைந்த செலவில் கேளிக் கையை ( Entertainment ) இது வழங்குவ தால், பொதுமக்களால் இது பெரிதும் வர வேற்கப்படுகிறது. பல் முளைக்காத பச்சைக் குழந்தையிலிருந்து பல் விழுந்த முதியவர் வரை திரைப்படம் பார்ப்பதில் மகிழ்ச்சியடை கிறார்கள். ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர் என்ற வேற்றுமையின்றி அனைவரும் திரைப்படத்தைப் பார்த்து அக மகிழ்வு கொள் கிறார்கள்.

இவ்வாறு அனைவரையும் தன்வசம் இழுக் கின்ற அளவுக்குப் பேராற்றல் பெற்ற இந்தத் திரைப்படம் தோன்றியதே பெரிய வரலாறா கும்.

**மேல்நாட்டில் திரைப்படம்**

சலனப் படத்தை உருவாக்கியவர் அமெரிக்க நாட்டு விஞ்ஞானியான தாமஸ் ஆல்வா எடிசன் என்று சொல்லப்பட்டு வந்தா லும், அவருக்கும் முன்பே 'லூமிரி' சகோத ரர்கள் இந்தக் கலையைக் கண்டு பிடித் தார்கள் என வரலாறு தெரிவிக்கிறது.

திரைப்படம் தோன்றுவதற்கு முன்பே புகைப்படம் தோன்றியிருந்தது. ஒரு மனித னின் உருவம் புகைப்படத்தில் வெளியாகி யுள்ள அற்புதத்தைக் கண்டு மக்கள் வியப்பில் ஆழ்ந்து கொண்டிருந்தார்கள்.

'ஸ்டில்' ( Still ) என்று சொல்லப்படும் அசையாத அந்தப் புகைப்படத்தைத் தொடர்ந்து செய்யப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, உருவங்கள் கைகளையும் கால்களை யும் ஆட்டுகின்ற வகையில் திரைப்படத்தை முதலில் கண்டு பிடித்தனர் லூமிரி சகோத ரர்கள். அவர்களது கண்டுபிடிப்பால்-உருவம் கை, கால்களை அசைப்பதையும், கண்களை உருட்டிப் பார்ப்பதையும், வாய் அசைவதை யும் கண்ட மக்கள் வியப்பில் ஆழ்ந்தனர். இந்தக் காட்சியைக் காண விரைந்தனர்; ஆயிரக் கணக்காகத் திரண்டனர்.

லூமிரி சகோதரர்கள் உருவாக்கிய திரைப்படத்தில் மனிதனின் கையும் கால் களும் அசைந்தனவே தவிர அவன் இருந்த இடத்திலேயேதான் இருந்தான். இடம் விட்டு இடம் நகரவில்லை. எனவே உருவங்கள் நகர்ந்து செல்வதைப் படமாக்கிக் காட்டு வதற்குரிய கருவியை எடிசன் கண்டு பிடிக் தார்.

துவக்கத்தில் மௌனப்படமாக (Silent Picture) வெளிவந்த திரைப்படம், பிரெஞ்சு விஞ்ஞானி யூஜின் அகஸ்டின் லாஸ்டே என்பவரின் அருந்தொண்டால் பேசும்படமாக மாறியது!

இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மன், அமெரிக்கா போன்ற நாடுகளில் திரைப்படத் தொழிலின் பேராற்றலை அறிந்துகொண்ட விஞ்ஞானிகள், கலைஞர்கள் பல்வேறு சோதனை களைச் செய்து வெற்றிகளைக் குவித்தார்கள்.

என்றாலும் எடுத்த எடுப்பிலேயே முழு நீளப் படமாக அவர்கள் தயாரித்துவிடவில்லை. சிறுதுண்டுப் படங்களாகத் தான் தயாரிக்கப் பட்டன. சிறு சிறு நிகழ்ச்சிகளை அடிப்படை யாய்க் கொண்ட நகைச்சுவை நிகழ்ச்சிகளை யும் சண்டைக் காட்சிகளையும் திரைப்படமாக் கினார்கள்.

பின்னர் கர்ணபரம்பரையாகச் சொல் லப்பட்டு வந்த கதைகளும் நாட்டிலே நாடக வடிவில் புகழ்பெற்ற கதைகளும் படமாகத் தயாரிக்கப்பட்டன.

இந்தப் போக்கை ஒரு சிலர் மாற்ற முனைந்தார்கள். டி. டபிள்யூ. கிரிபித், சார்லி சாப்ளின் போன்ற திரையுலக மேதைகள் புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டு அமெரிக்க நாட்டில் ஒப்பற்ற திரை ஓவியங் களை உருவாக்கினார்கள். புடோவ்கின், குல் ஷோவ் போன்ற ரஷ்ய நாட்டு மேதைகள் திரைப்படக் கலைக்கு இலக்கணம் வகுத்தனர்.

ஜெர்மன் நாட்டிலே எரிக் பாம்மர் என்பவர், ஒரு திரைப்படத் தயாரிப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைத் தார். அவருடன் வான்ஸ்ட் ரோம் சேர்ந்து கொண்டார்.

அதன் விளைவு, ரஷ்யாவிலும் ஜெர்மனியிலும் திரைப்படக் கலைக்கு மகத்தான வரவேற்பு ஏற்பட்டது. திரைப்படம் பேராற்றல் பெற்றது, அதை மக்களுக்குப் பயன்படுத்தலாம் என்னும் உண்மை தெளிவாகியது.

மக்களிடையே திரைப்படக் கலைக்கு மாபெரும் வரவேற்பு உருவாகியதால், கலையம்சமாகக் கருதினாலும்கூட வியாபார முறையில் உருவாக்கினால் பொது மக்களிடமிருந்து அமோகமான வரவேற்புக் கிடைக்கும் என்றும் அதைக் கொண்டு வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்றும் பல தயாரிப்பாளர்கள் கருதினார்கள். அவ்வாறே பாடுபட்டுப் பெரும் பொருள் தேடிக் கொண்டார்கள்.

மேனாடுகளில் வெகு வேகமாகப் பரவி வந்த திரைப்படக் கலைத் தொழில்-இந்தியாவிற்கும் பரவ ஆரம்பித்தது. படிப்படியாகத் தமிழகத்திற்கும் அறிமுகம் ஆகியது.

**இந்தியாவின் திரைப்படத் தந்தை !**

இந்தியாவில் ''தாதாசாகிப் பால்கே'' என்பவர் அரும்பாடுபட்டு முதன் முறையாக ஒரு படத்தைத் தயாரித்து 1913-ல் வெளியிட்டார். இவர்தான் ''இந்தியத் திரை உலகத்தின் தந்தை!'' என்று அழைக்கப்படுகிறார்.



**இந்தியத் திரைப்படத் தந்தை தாதாபாய் பால்கே**

'அரிச்சந்திரா' என்னும் படத்தைத் தயாரித்து பம்பாயிலிருந்த காரனேஷன் தியேட்டரில் திரையிட்டார்.

நமது நாட்டில் வீடுதோறும் சொல்லப்பட்டு வந்த கதை—சத்தியத்தின் மொத்த உருவம் என்று சொல்லப்பட்டவரின் வரலாறு தங்கள் கண்களுக்கு எதிரில் படமாக ஓடுவதைக் கண்ட பொது மக்கள் உள்ளம் மகிழ்ந்தார்கள்; பாராட்டைக் குவித்தார்கள்.

இந்தப் படத்திலே குறிப்பிடத் தக்க செய்தி என்ன தெரியுமா? சந்திரமதியாக நடித்தவர் ஒரு பெண்மணியல்ல—ஓர் ஆண் மகன்! காரணம்—பெண்கள், அக்காலத்தில் திரைப்படத்தில் நடிப்பதற்கு அச்சப்பட்டார்கள். புகைப்படம் எடுத்துக் கொண்டாலே ஆயுள் குறைந்துவிடும் என்ற மூட நம்பிக்கையை சுவீகாரம் செய்திருந்த நமது நாட்டுப் பெண்கள் அச்ச முற்றதில் அதிசயம் என்ன இருக்கிறது?

தாதாசாகிப் பால்கேயின் 'அரிச்சந்திரா' வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து இந்துஸ்தான் சினிமா பிலிம் கம்பெனி என்ற நிறுவனத்தைத் துவக்கி, 'கிருஷ்ண ஜன்மா' என்ற படத்தை உருவாக்கினார். இந்தப் படமும் நல்ல வெற்றியைப் பெற்றது.

அதுவரை வெளிநாட்டுப் படங்களை வெளியிட்டு வந்த இந்திய நாட்டுத் திரையரங்குகள், சொந்த நாட்டுப் படங்களுக்கு வரவேற்பு அமோகமாக இருப்பதை உணர்ந்து அவைகளைத் திரையிட ஆர்வம் காட்டின. திரையரங்குகளின் ஆர்வத்தைக் கண்டு திரைப்படத் தயாரிப்பாளர்களும் அதிக அளவில் தோன்ற ஆரம்பித்தார்கள்.

இந்துஸ்தான் சினிமா பிலிம் கம்பெனிக்குப் பிறகு கல்கத்தா மதன் தியேட்டர்ஸ் என்ற நிறுவனம் உருவாயிற்று.

பம்பாய் மட்டுமின்றி, கல்கத்தா, கோலாப்பூர் ஆகிய நகரங்களிலும் திரைப்படத் தொழில் வளர ஆரம்பித்தது.

கோஹினூர் பிலிம் நிறுவனம், இம்பீரியல் பிலிம் நிறுவனம், மெஜஸ்டிக் பிலிம் நிறுவனம், சாரதா பிக்சர்ஸ், ரஞ்சித், சாகர் முதலிய திரைப்பட நிறுவனங்கள் திரைப்படங்களை உருவாக்கின.

இந்தியத் திரைப்படத் தொழிலில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி 1925-ஆம் ஆண்டில் நடைபெற்றது. நிரஞ்சன்பால், ஹிமான்சுராய், ஜயகோபால் பிள்ளை என்ற மூவர் சேர்ந்து கூட்டாக உருவாக்கிய **'ஆசியாவின் ஜோதி'** என்ற படம் தயாரிக்கப்பட்டு, மாபெரும் வெற்றியைத் தேடிக் கொண்டது. இந்திய அரசின் பாராட்டுதல்களையும் பெற்றது. அது இந்திய நாட்டில் மட்டுமல்ல-ஐரோப்பாக் கண்டத்திலும் அமெரிக்காக் கண்டத்திலும் வெற்றிக் கொடி நாட்டியது.

**இந்தியாவின் முதல் பேசும் படம்**

இந்தியாவின் முதல் பேசும் படமான 'ஆலம் ஆரா' ஆர்தேஷிர்-இராணி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1931-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14-ஆம் நாளன்று திரையிடப்பட்டது. ஜிபேடா, விட்டல் போன்றவர்கள் இதில் நடித்திருந்தார்கள்.

இந்தப் படத்திற்குப் பிறகு, 'ஷரின் பர்ஹாத்', 'லைலா மஜ்னு' ஆகிய படங்களைத் திரையிட்டது மதன் தியேட்டர்ஸ் என்னும் நிறுவனம். அதைத் தொடர்ந்து, பல்வேறு நிறுவனங்கள் பேசும் படங்களைத் தயாரிக்கத் தொடங்கின.

தமிழ்நாட்டில் அக்காலத்தில் படப்பிடிப்பு வசதிகள் இல்லாததால் தமிழ்ப் படங்களும், தெலுங்குப் படங்களும் கூட கல்கத்தாவில்தான் தயாரிக்கப்பட்டன.

கல்கத்தா நியூ தியேட்டர்ஸ் நிறுவனமும் தேவகி போஸும், டைரக்டர் வி. சாந்தா

ராமும் மிக உன்னதமான திரைப்படங்களைத் தயாரித்து மக்களின் ஆதரவை அமோகமாகப் பெற்றனர். அவர்களது படங்களில் குறிப்பிடத் தக்கவை, வித்யாபதி, புராண் பகத், துணியா நா மானே, தேவதாஸ், படோசி, துஷ்மன் ஆகியவை ஆகும்.

பம்பாய் டாக்கீஸ் என்ற நிறுவனமும், சாகர் மூவிடோன் என்னும் நிறுவனமும் தயாரித்த திரைப்படங்களும் மக்களின் பேராதரவைப் பெற்றன.

## தென்னகத் திரைப்பட வரலாறு

தென்னகத்திலும் திரைப்படக்கலையின் அருமை உணரப்பட்டது. திரு ஆர். பிரகாஷ் என்பவரும் திரு ஏ. நாராயணன் என்பவரும் தமிழ்ப்படத் தயாரிப்பில் ஈடுபட்டனர்.

திரு வெங்கையா என்பவர் 1908-ஆம் ஆண்டு, மேனாட்டிலிருந்து 'க்ரோனோ மேக போன்' என்ற கருவியை இறக்குமதி செய்தார். இந்தக் கருவி, பாடுவதற்கும், பேசுவதற்கும் பயன் பட்டது. இதன் உதவியால், பேச்சை உருவாக்கி, மௌனப் படங்களைத் திரை அரங்குகளில் காண்பித்தனர். இது வெற்றி பெறுமா என்று சந்தேகத்துடன்தான் இருந்தார் வெங்கையா; ஆனால் அது மாபெரும் வெற்றி பெற்றது. அந்தக் கருவியை இலங்கை, பர்மா முதலிய நாடுகளுக்கும் எடுத்துச் சென்று பெயரையும் புகழையும் அவர் தேடிக்கொண்டார்.

திரைப்பட நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்காகத் தமது மகன் பிரகாஷை மேனாடுகளுக்கு அனுப்பி வைத்தார். அவரும் தந்தையின் விருப்பப்படி சென்று, அருங்கலையைக் கற்றுத் திரும்பினார். தென்னகத் திரைப்படத் தொழிலுக்கு அடித்தளம் அமைத்தார்.

இவரைப் போலவே திரு ஏ. நாராயணன் என்பவரும் தென்னகத் திரைப்படத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கியிருக்கிறார். இவர், மேனாட்டுப் படங்களைத் திரையிடுதல், விநியோகம் செய்தல், ஆகிய துறைகளில் நல்ல அனுபவம் பெற்றவர் அந்தக் காலத்திலேயே ஜப்பான், சைனா முதலிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்தவர்.

கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களில் தயாரிக்கப்படுவதைப் போன்று நாமும் தமிழ்ப் படங்களைத் தயாரிக்க வேண்டும் என்று முனைந்தார். அதன் பலனாக-உள்ளூர்ப் பிரமுகர்கள் சிலரைக் கூட்டாகச் சேர்த்துக் கொண்டு, ஜெனரல் பிக்சர் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தைத் துவக்கி அதிக அளவில் திரைப்படங்கள் தயாரித்தார். சென்னையில் தயாராகிய திரைப்படங்கள் வெளிநாடுகளுக்கும் சென்றன.

1928-ஆம் ஆண்டின் இறுதியில் ஜி. பி. சி. என்று சுருக்கமாக அழைக்கப்பட்டு வந்த ஜெனரல் பிலிம்ஸ் கார்ப்பரேஷன் என்னும் பட நிறுவனம் துவக்கமாகியது. இதன் தயாரிப்புகள் அரைகுறையில் நின்றுவிட்டன. பின்னர் ராவ்பகதூர் வெங்கட்ராமையர் நிர்வாகத்தில் இந்த நிறுவனம் பணியாற்றத் தொடங்கியது. திரு கே. சுப்பிரமணியமும் திரு ராஜா சாண்டோவும் இதில் சேர்ந்திருந்தனர்.

## தமிழில் தயாரான முதல் பேசும்படம்!

மௌனப் படங்களின் சரிதம் முடிவடைந்து வட இந்தியாவில் பேசும் படங்கள் தோன்றியதையொட்டித் தமிழகத்திலும் பேசும் படங்களைத் தயாரிக்கச் சிலர் முன் வந்தனர். தென்னகத்தில் வசதிக் குறைவாக இருந்ததால் வட நாட்டிலேயே பேசும் படங்கள் தயாரிக்கப்பட்டன. முதன் முதலாக இம்பீரியல் பிலிம்ஸ் என்னும் நிறுவனம் எச். எம். ரெட்டி டைரக்ஷனில் 'காளிதாஸ்' என்ற பேசும் படத்தை 1931-ல் தயாரித்தது. இதில் டி. பி. ராஜலட்சுமி என்பவர் நடித்திருந்தார். இதற்குப் பின்னர் அரிச்சந்திரா, காலவா என்னும் படங்கள் தயாரிக்கப்பட்டன.

1933-ல் கோவை வின்சென்ட் அவர்கள் 'வள்ளி திருமணம்' என்றொரு திரைப்படத்தை வெளியிட்டு வெற்றி கண்டார். இது, நாடறிந்த கதை ஆதலினால், பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது, இதைப் பின்பற்றி இராமாயணம், சகுந்தலை, சாவித்திரி, சீதா கல்யாணம் போன்ற படங்கள் தயாரிக்கப்பட்டன.

## சென்னையில் தயாரான முதல் பேசும் படம்

1934-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திரு ஏ. நாராயணன் சென்னையில், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஸ்ரீனிவாசன் சினிடோன் என்ற படப்பிடிப்பு நிலையத்தினை உருவாக்கினார். சென்னையில் முதல் பேசும் படமாகத் தயாரிக்கப்பட்டது, **'ஸ்ரீனிவாச கல்யாணம்'** ஆகும். இதைத் தொடர்ந்து



**முதல் பேசும்படக் கதாநாயகர்**
திரு. பி. எஸ். ஸ்ரீனிவாச ராவ்

சென்னையில் பல்வேறு புராணப்படங்கள் உருவாயின. முழு நீள நகைச் சுவைப்படம் மடசாம்பிராணி' தயாரிக்கப்பட்டது. திரு நாராயணனின் மனைவி, பல படங்களுக்கு ஒலிப்பதிவு செய்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இவர்தான் முதல் பெண் ஒலிப்பதிவாளர் ஆவார். இன்றுவரை இந்தத் துறையில் வேறு பெண்மணி பணியாற்றவில்லை.

## தமிழ்ப்பட வளர்ச்சி

1934-ல் வேல் பிக்சர்ஸ் என்று மற்றொரு படப்பிடிப்பு நிலையமும் (Studio) சென்னையில் துவக்கப்பட்டது. தேனாம்பேட்டையில் எல்டாம்ஸ் சாலையில் இது ஆரம்பமாகியது. புகழ்பெற்ற ஒளிப்பதிவாளர் திரு கே. ராம்நாத் டைரக்டர் முருகதாசா ஆகிய

வர்கள் இந்த நிலையத்தில் பணி ஆற்றினர். நரசிம்மராவ் டைரக்ஷனில் சீதா கல்யாணம், கிருஷ்ண லீலா, மாயாபஜார் ஆகிய தெலுங்குப் படங்களும், பட்டினத்தார், வல்லாள மகாராஜன் ஆகிய படங்களும் தயாரிக்கப்பட்டன. தண்டபாணி தேசிகர், தேவசேனு ஆகியோர் இதில் நடித்தனர்.

மனோரமா பிலிம்ஸ் என்னும் நிறுவனம் திரு எஸ். எஸ். வாசன் அவர்கள் எழுதி, திரு எம். ஜி. ஆர். அவர்கள் நடித்த சமூகக் கதையான சதி லீலாவதியைத் தயாரித்து வெளியிட்டது. எல்லிஸ் ஆர். டங்கன் என்னும் மேனாட்டுக்காரர் இந்தப் படத்தின் டைரக்டராகப் பணி புரிந்தார்.

எம். கே. தியாகராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா போன்றவர்கள் கதாநாயகர்களாக நடித்த படங்கள் மாபெரும் வெற்றி பெற்றன.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நகைச்சுவையுடன் சீர்திருத்தக் கருத்தையும் சேர்த்துத் தந்த திரைப்படங்கள் மாபெரும் வெற்றி பெற்றன.

ஆகியவர்கள் டைரக்டர்களாகப் பணியாற்றினர்.

சென்னை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் வியாசாராவ் என்பவர் ஜெயவாணி சினிடோன் என்னும் படப்பிடிப்பு நிலையத்தைத் துவக்கினார். 'தசாவதாரம்' என்னும் படம் இங்குத் தயாரிக்கப்பட்டது.

பின்னர் நேஷனல் மூவிடோன் என்னும் படப்பிடிப்பு நிலையம் துவக்கப்பட்டது. 'பார்வதி கல்யாணம்', 'சீமந்தனி', 'ராஜமோஹன்' ஆகிய படங்கள் தயாராயின.

பின்னர் கார்த்திகேயா பிலிம்ஸ், மோஷன் பிக்சர்ஸ் கம்பைன் ஸ்டுடியோ ஆகிய படப்பிடிப்பு நிலையங்கள் துவக்கப்பட்டன.

சென்னை நகரத்தில் திரைப்பட நிறுவனங்களும், படப்பிடிப்பு நிலையங்களும் துவக்கம் செய்யப்பட்டதைப் போலவே, கோவையில் பிரிமியர் சினிடோன், சென்டிரல் ஸ்டுடியோ ஆகிய படப்பிடிப்பு நிலையங்களும், சேலத்தில்







அதன்பின்னர், தமிழ்நாடு டாக்கீஸ் என்னும் நிறுவனம் 'மகாபாரதத்தை'யும் தேவி பிலிம்சார் கன்னடத்தில் 'சம்சார நௌகா'வையும் கணேஷ் பிலிம்ஸ் 'காளிதாஸ்' என்ற படத்தையும் தயாரித்தன.

இந்தப் படப்பிடிப்பு நிலையம், பிற்காலத்தில் வேல் நகராக மாறி, நரசு ஸ்டுடியோ என்று வழங்கப்பட்டது.

அண்டயாறில் 'மீனாட்சி சினிடோன்' என்னும் படப்பிடிப்பு நிலையம் துவக்கப்பட்டது. 1935-ல் அதே இடத்தில் சுந்தரம் சௌண்ட் ஸ்டுடியோ என்ற நிறுவனம் ஆரம்பமாகியது. 'கபீர்தாஸ்', 'நளாயிணி', 'அதிரூப அமராவதி' 'ராஜபக்தி', 'பத்மாசூர மோகினி' ஆகிய படங்கள் தயாராகின. ஆர். பிரகாஷ், நாராணன். சி. வி. ராமன், சுந்தர்ராவ் நட்கர்ணி

மாடர்ன் தியேட்டர்ஸ் என்னும் படப்பிடிப்பு நிலையமும் துவக்கமாயின. 'பிரிமியர் சினிடோன்' பின்னர் கந்தன் கம்பெனியாகி பக்ஷிராஜாவாக மாறிவிட்டது. மதுரையிலும் 'சித்ரகலா மூவிடோன்' என்ற படப்பிடிப்பு நிலையம் துவக்கம் ஆகி, குமரகுரு, தாய்நாடு ஆகிய படங்களை வெளியிட்டது.

பல்வேறு திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்கள் தோன்றி, தமிழ்த் திரைப்படத் தொழிலை வளர்ச்சி பெறச் செய்து வந்தன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை திரு கே. சுப்ரமணியம் அவர்களால் மதராஸ் யுனைடெட் ஆர்ட்டிஸ்ட் கார்ப்பரேஷன், எஸ். சௌந்தரராஜன் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு டாக்கீஸ், எஸ். எஸ். வாசன் அவர்களால் உருவாக்கப்பட்ட ஜெமினி, திரு டி. ஆர். சுந்தரம் அவர்களால் துவக்கப்பட்ட

மாடர்ன் தியேட்டர்ஸ், திரு எஸ். கே. மொய்தீன், சோமசுந்தரம் ஆகியவர்களால் அமைக்கப்பட்ட ஜூபிடர் பிக்சர்ஸ், திரு. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களால் துவக்கப்பட்ட ஏ. வி. எம். பிக்சர்ஸ் ஆகியவை.

இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் இந்தியத் திரைப்படத்துறைக்குப் பாதிப்பு ஏற்பட்டது. தமிழ்த் திரைப்படத் துறையும் பாதிப்பு அடைய நேர்ந்தது. ஏறக்குறைய 15 ஆயிரம் அடிகளுக்கு மேலும் 20 ஆயிரம் அடி வரையிலும் எடுக்கப்பட்டு வந்த திரைப் படங்களுக்குக் கட்டுப்பாடு வந்தது. 11 ஆயிரம் அடிக்குள்ளாகத்தான் படம் எடுக்கப் பட வேண்டும் என்ற விதி கண்டிப்பாக்கப்பட்டது. அந்த விதியையும் ஏற்றுத் தமிழ்த் திரைப்படங்களின் தலைவிதியை நல்ல முறையிலே உருவாக்கி மாபெரும் வெற்றியைக் குவித்தார்கள் தமிழ்த் திரைப்படக் கலைஞர்கள்.

திரைப்படம் எடுப்பவர்கள்-ஜப்பான் நாட்டைத் தாக்கியும், ஆங்கில அரசை வாழ்த்தியும் யுத்தப் பிரச்சாரம் செய்யும் வகையிலே ஒரு படத்தைத் தயாரித்து வெளியிட வேண்டும் என்ற கட்டளையும் விதிக்கப்பட்டது, ஆங்கில அரசாங்கத்தினல்-அந்தக் கட்டளையையும் ஏற்று அதுபோன்ற படங்களையும் தயாரித்து வெற்றி பெற்றது தமிழ்த் திரைப் படத் துறை.

பர்மாராணி, மானசம்ரக்ஷணம், என் மகன், போன்றவைகள் யுத்தப் பிரச்சாரத்தைச் செய்த படங்களில் குறிப்பிடத் தக்கவையாகும்.

**சமூகப்படத்திற்குப் பெருமை சேர்த்தவர்!**

சமூகப் படம் என்றல் பொதுமக்களிடம் வரவேற்பு இல்லாத காலமும் இருந்தது; அதனை மாற்றிய பெருமை பேரறிஞர் அண்ணவின் 'வேலைக்காரி'யைச் சாரும். அந்தப் படம் வெளிவந்த பின்னர் 'வழக்கு மன்றக் காட்சிகள்' என்றல் மிகவும் சுவையான பகுதி என்ற எண்ணம் திரைப்பட ரசிகர்களுக்கு



ஏற்பட்டது. இன்றுவரை 'வழக்கு மன்றக் காட்சி'யின் வரவேற்புக் குறையவில்லை என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இது போன்ற எண்ணற்ற தமிழ்ப் படங்கள் பாடங்களாக அமைந்து பொது மக்களுக்கு மகிழ்ச்சியையும் கருத்துத் தெளிவையையும் ஊட்டி வந்திருக்கின்றன.

அவ்வப்போது புதிய புதிய இயக்குநர்களும் கதாசிரியர்களும், தோன்றி, புதிய புதிய சாதனைகளை வழங்கி, தமிழ்த் திரைப்படத் துறை என்னும் ஆலமரத்துக்கு விழுதுகளாக இருந்து வருகிறர்கள். தமிழ்த்திரை உலகம் வெற்றிக் கொடி நாட்டுவதற்கு உதவி செய்து வருகிறர்கள். அவர்களின் அருந்தொண்டினல் தமிழ்த் திரையுலகம் வளர்கிறது. வளர்கிறது-வளர்ந்து கொண்டே இருக்கிறது.

—**எஸ். சண்முகசுந்தரம், பி.லிட்.**



*தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முதன் முதலாக வெற்றியடைந்த படம் டி. பி. ராஜலட்சுமி நடித்த 'வள்ளி திருமணம்.'

*1934-ஆம் ஆண்டு! தமிழ்த் திரைப்பட உலகில் ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதர் புகுந்த ஆண்டு.

*1935-ல் கே. பி. சுந்தராம்பாள், என். சி. வசந்தகோகிலம், நவாப் ராஜமாணிக்கம் ஆகியோர் திரை உலகில் அறிமுகமானர்கள்.

*1936-ல் நாளிதழ்களில் திரைப் பட விளம்பரங்கள் வரத் தொடங்கின

*முதன் முதலாக வெளி நாட்டு இயக்குநர் எல்லிஸ் ஆர். டங்கன் 'சதிலீலாவதி'-யை டைரக்ட் செய்தார்.

*1937-ல் மதுரை ராயல் டாக்கீசார் தயாரித்த 'சிந்தாமணி' தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. இப்படத்தின் பாடல்கள் மூலை முடுக்கெல்லாம் பாடப்பட்டது.

*முதன்முறையாக வெளிநாட்டு நடிகர் ஜான் கவாஸ், கே. ஆர். செல்லத்துடன் 'வனராஜ கார்சான்' என்னும் படத்தில் நடித்தார்,

*கார்ட்டூன் படத்தை முதன் முதலாக வெளியிட்டது ஜெமினி.

*முதன் முதலாக 1950ல் 'நீலக்கடல்' என்னும் ஆங்கிலப் படம் தமிழில் 'டப்' செய்யப்பட்டு வெளி வந்தது.



தமிழக புயல்-வெள்ள நிவாரண நிதிக்காக, தமிழ்நாடு தொழில்-வணிகத்துறையின் சார்பில் ரூபாய் 3,35,404.47-ஐ 2-1-1978 அன்று, தொழில் வணிகத்துறை இயக்குநர் திரு ப. செல்வராஜ் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி. ஆர். அவர்களிடம் அளித்தார். தமிழ்நாடு அரசின் நிதித்துறைச் செயலாளர் திரு எஸ். குகன் அவர்களும், தொழில்துறைச் செயலாளர் திரு கே. வெங்கடேசன் அவர்களும் உடனுள்ளனர்.

# படமும் செய்தியும்

தமிழகப் புயல்-வெள்ள நிவாரண நிதிக்காக சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் சார்பில், அதன் தஸேவர் திரு டி. வி. வெங்கட் .ராமன் அவர்கள் 9—1—1978 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் ரூபாய் 2,23,760-க்குரிய காசோஸேயை வழங்கினர். தொழிற்சங்கத் தஸேவர்களான திரு அந்தோணிப்பிள்ளை, திரு ஏ. எஸ். கே., திரு எஸ். எம். நாராயணன் ஆகியோர் உடனிருந்தனர்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அனைத்து இந்திய வானொலியின் பொன்விழா 8-1-1978 அன்று சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு மத்திய செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு எல். கே. அத்வானி அவர்கள் பொன்விழாவிற்குத் தலைமை வகிக்க வந்த தமிழக முதல்வர் அவர்களை வரவேற்கும் காட்சி.

"பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்குரிய வாய்ப்பும் எல்லையும்" என்ற தலைப்பில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற அனைத்து இந்தியக் கருத்தரங்கை, மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு எச். எம். பட்டேல் அவர்கள் 8-1-1978 அன்று துவக்கிவைத்து உரையாற்றினார். அக்கருத்தரங்கிற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமை வகித்தார்.





தமிழகத்திற்கு வருகை தந்த ஏழாவது நிதிக் குழுவின் தலைவரையும் உறுப்பினர்களையும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள், 15-1-1978 அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்.

இந்தியாவின் ஏழாவது நிதிக் குழுவின் தலைவர் திரு ஜே. எம். ஷெலாட் அவர்களும், உறுப்பினர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுடனும், மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களுடனும், மற்ற அமைச்சர் களுடனும் தமிழகத்தின் திட்டம் பற்றி 16.1.1978 அன்று விவாதித்தனர்.





சென்னைக்கு 16—1—1978 அன்று வருகை தந்த மேதகு இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் திரு பி. டி. ஜாட்டி அவர்களை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில், மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களும் வரவேற்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கோவளத்தில் உள்ள 'பிஷர்மென்ஸ் ஹோவ்' என்ற ஓட்டலில், 16—1—1978 அன்று, திரைப்படத் திருவிழா '78-ல் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்தளித்தார். அவ்விருந்திற்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளைத் தமிழக முதல்வர் வரவேற்பதைப் படத்தில் காணலாம்







மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு எச். எம். பட்டேல் அவர்கள், 9-1-1978 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

ஆந்திர மகிளா சபாவின் நர்சிங் ஹோமின் வெள்ளிவிழாத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள, குழந்தைகளைப் பகல் நேரத்தில் பாதுகாக்கும் நிலையத்தை, மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமையில், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு எச். எம். பட்டேல் அவர்கள் 8-1-1978 அன்று துவக்கி வைத்தார்.





சுற்றுலாத்துறையின் அரங்கில் உள்ள இசைக் கருவிகள் பகுதியை மாண்புமிகு மத்திய செய்தி-ஒலிபரப்பு அமைச்சர் திரு எல். கே. அத்வானி அவர்கள் பார்வை யிட்டு வியந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், காய்கறி மற்றும் இன்றியமையாப் பொருள்கள் விற்பனைத் திட்டத்தை, 14—1—1978 அன்று, சென்னை 'காமதேனு' சிறப்பு அங்காடியில் துவக்கி வைத்தார். அவ் விழாவில், காய்கறி மற்றும் இன்றியமையாப் பொருள்களை விற்பனை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒருவரிடம் மூன்று சக்கர வண்டியின் சாவியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.





# கட்டில் ஒலி நிறையட்டும் தொட்டில் ஒலி குறையட்டும்



கவிஞர் கா. வேழவேந்தன்

கட்டில்ஒலி என்றாலே என்ன தோன்றும்?
காதல்மொழி, வளையோசை இனிமை யன்றோ?
தொட்டில்ஒலிச் சத்தமென்றால் என்ன? அஃது
தொண்டையினைக் கிழித்துவரும் அழுகை யன்றோ?
கட்டில்களின் வாரிசுதான் தொட்டில்! ஆனால்
காணுகின்ற தொட்டில்களே நிறைந்து போனால்
கட்டில்களோ வீட்டினின்றே மறையு மன்றோ?
காதல்எங்கே? வாழ்வெங்கே? கானல் அன்றோ?

வானகத்தில் விண்மீன்கள் பெருகு மானால்
வையகத்தின் இருள்ஓடும்; ஒளிகி டைக்கும்!
மீனினங்கள் கடலகத்தில் பெருகு மானால்
மெய்வயிற்றின் பசிஓடும்: பஞ்சம் தீரும்!
தேன்பிலிற்றும் பூவினங்கள் பெருகு மானால்
செழுந்தேனால் நோய்ஓடும்; மணமும் தேங்கும்!
பேன்இனங்கள் போலிங்கே மனிதக் கூட்டம்
பெருகுவதால் வீணுக்குக் குழப்பம் தானே!

குழல்போலும், யாழ்போலும் இரண்டே காண
குறள்நூலார் அறிவுரையாய்ச் சொல்லி வைத்தார்;
விழலுக்காய் மத்தளங்கள், கடங்கள் எல்லாம்
விருத்திசெய வள்ளுவரா சொல்லிச் சென்றார்?
அழகான 'மனைவி'யினை ஒவ்வோ ராண்டும்
'அம்மா'வாய் ஆக்கிப்பின் எழிலைப் போக்கி,
"இழவேடுத்த மூதேவி!" என்றே திட்டும்
எண்ணத்தைக் கணவன்மார் விடவேண் டாமா?

'ஏழ்பிள்ளை பெற்றெடுத்த நல்ல தங்காள்
எத்தனைஎத் தனைதுயரம் பெற்றுள்? பின்னர்
பாழ்கிணற்றில் அவைகளையே எறிந்தாள்!' என்றே
படிக்கின்ற பங்கசங்கள் இன்னும் தங்கள்
வாழ்வினிலே மாற்றங்கள் காணு தற்கே
வழிகாண மறுப்பதுமேன்? இந்த நாட்டில்
ஆழ்கல்வி, பகுத்தறிவு பரவ வேண்டும்!
அதற்கான சட்டங்கள் வருதல் வேண்டும்!

ஒருநிமிட நேரத்தில் என்னால் இங்கே
ஓரடியே எழுதுதற்கு முடியும்! அந்த
ஒருநிமிட நேரத்தில் இந்தி யாவில்
'உணவெங்கே?' எனக்கேட்டு மண்ணின் மீதோ
ஒருகுழந்தை, இருகுழந்தை பிறப்ப துண்டா?
உற்பத்தி 'நாற்பது'க்கு மேலே யன்றோ?
இருட்டுலகில் நடக்கின்ற தயாரிப் புக்கே
எப்படியும் பெரும்பூட்டைப் போட வேண்டும்!

வயலினிலே உற்பத்தி மிகுதி யானால்
வயிறுகளும் வாய்களுமே வாழ்த்திப் போற்றும்!
பயன்ஆலை உற்பத்தி மிகுதி யானால்
பார்செழிக்கப் பொருள்களிங்கே கிடைக்கும்! ஆனால்
வியக்கின்ற வகையினிலே போட்டி போட்டு
வீட்டறையில் உற்பத்தி மிகுதி யானால்
மயக்கமன்றோ வருகிறது! கோள மீது
மண்வயல்கள் வளர்கிறதா? எண்ண வேண்டாம்!

கீரைகளைத் தண்டாக வளர்க்கும் போதும்
கிளைப்பதற்கே இடைவெளியை விடுகின் றோம்நாம்!
ஏரழகுத் தாய்வாழை செழிப்ப தற்கே
எழுகின்ற கன்றுகளை வெட்டு கின்றோம்!
யாருமிங்கே பிறந்துவிட்ட மழலை தன்னை
இரக்கமின்றிக் கொல்வதற்குச் சொல்வ துண்டா?
கூரறிவைப் பயன்படுத்திக் காதல் வாழ்வைக்
குலைக்காமல் காப்பதற்குத் தாள்தான் தேவை!

கருத்துக்குத் தடைவேண்டாம்! எனினும் இங்கே
கருத்தடைக்குத் தடைபோடல் தேவை தானா?
தெருத்தெருவாய் உணவின்றி, வேலை யின்றித்
தேம்பியழும் திருக்கூட்டம் பெருக லாமா?
இருக்கின்ற உயிர்ப்பெருக்கம் இவ்வே கத்தில்
இனப்பெருக்கம் செய்திட்டால் எதிர்கா லத்தில்
இருப்பதற்கும் படுப்பதற்கும் இடமும் உண்டா?
இவ்வழிக்கே கருவழியை அடைக்க வேண்டும்!

(சென்னைக் 'குடும்பநலத் திட்டக் கவியரங்கில்'
பாடிய பாடல்களில் சில....)







# வாழைக்காய்-பழங்களிலிருந்து வகைவகையான உணவுகள்

முக்கனிகளில் ஒன்றான வாழை, ஏழை மக்களின் பழம் என்று கருதப்படுகிறது. நமது நாட்டில் உற்பத்தியாகும் பழங்களில் வாழை மூன்றில் ஒரு பங்கு இடத்தை வகிக்கின்றது. நூறு கிராம் வாழைப் பழத்தில் உள்ள உணவுச் சத்துக்களாவன :

| | |
|---|---|
| புரதம் | 1.2 கிராம் |
| தாது உப்புகள் | 0.8 கிராம் |
| மாவுச் சத்து | 27.2 கிராம் |
| கால்ஷியம் | 17.0 மி.கிராம் |
| பாஸ்பரஸ் | 36.0 மி.கிராம் |
| இரும்பு | 0.9 கிராம் |
| உயிர்ச் சத்து 'சி' | மி. 7.0 கிராம் |

நமது உணவுப் பழக்கத்தில் வாழையைப் பழமாக உண்பதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. மேலும் நமது அன்றாட சமையல் முறையில் வாழைக் காயைச் சாம்பாரில் சேர்த்தும், பொரியலாகவுமே உபயோகிக்கிறோம். இவை யல்லாமல், வாழைக் காய், வாழைப் பழம் ஆகியவற்றை உபயோகித்துப் பல தினுசுகளான இனிப்பு, கார தின்பண்டங்கள் தயாரிக்கலாம். வாழைக்காய், பழம் ஆகியவற்றை உபயோகித்துத் தயாரிக்கும், சூப் வகைகள், எண்ணெய்யில் பொரித்தெடுக்கும் உணவுப் பொருட்கள், குளிர வைத்துத் தயாரிக்கும் உணவுப் பொருட்கள் சிலவற்றைத் தயாரிக்கும் முறைகள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன.

### வாழைக்காய் சூப்

**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| வாழைக்காய் துருவல் | 1 கப் |
| நறுக்கிய வெங்காயம் | 1/4 கப் |
| வனஸ்பதி அல்லது எண்ணெய் | 1 மேசைக் கரண்டி |
| ரொட்டி (லேசாக ரோஸ்ட் செய்தது) | 2 துண்டுகள் |
| பால் | 3 மேசைக் கரண்டி |
| உப்பு, மிளகுப் பொடி | ருசிக்கேற்றவாறு |

**செய்முறை :**

1. வாணலியில் எண்ணெய் விட்டு, வெங்காயம், வாழைக்காய் ஆகியவற்றை நன்கு வதக்கவும்.

2. இதில் தண்ணீர் சேர்த்து, உப்பு, மிளகுப் பொடியும் போட்டுக் கொதிக்கவிடவும்.

3. காய் நன்கு வெந்தவுடன் பால் விட்டுக் கலக்கவும்.

4. இதில் ரொட்டித் துண்டுகளைப் போட்டுப் பரிமாறவும்.



### வாழைக்காய் நூடில் சூப்

**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| மோரிஸ் வாழைக்காய்த் துருவல் | 2 கப் |
| நூடில்ஸ் | 1 கப் |
| அடித்த முட்டை | 2 |
| மெல்லியதாக நறுக்கிய வெங்காயம் | 1/4 கப் |
| தக்காளி | 2 (நறுக்கியது) |
| பூண்டு | 2 விரல் |
| எண்ணெய் | 1 மேசைக் கரண்டி |
| உப்பு, மிளகுப் பொடி | ருசிக்கேற்றவாறு |

**செய்முறை :**

1. வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு வெங்காயம், பூண்டு, தக்காளி ஆகிய வற்றை வதக்கவும்.

2. இதில் வாழைக்காய்த் துருவலையும் சேர்த்துத் தண்ணீர் விட்டு வேக விடவும்.

3. உப்பு, மிளகுப் பொடியும் சேர்த்து கொதிக்க விடவும்.

4. கொதிக்கும்போது நூடில்ஸ் சேர்த்து ஐந்து நிமிடம் வைக்கவும்.

5. இதில் அடித்த முட்டையையும் சேர்த்துச் சூடாகப் பரிமாறவும்.

## வாழைக்காய் பிட்சாய்

**தேவையான பொருட்கள் :**

மோரிஸ் வாழைக்காய் வேக வைத்தது — 1 கப்

மைதா மாவு — 1 கப்

பேகிங் பவுடர் — 3 தேக்கரண்டி

பொடி செய்த சர்க்கரை — 3 தேக்கரண்டி

வனஸ்பதி—வெண்ணெய் —மார்க்காரின் — 3 மேசைக் கரண்டி

முட்டை — 1

**செய்முறை :**

1. பேகிங் பவுடரை மைதா மாவுடன் சேர்த்து நான்கு அல்லது ஐந்து முறை சலித்து எடுக்கவும்.

2. சர்க்கரையுடன் வெண்ணெய் அல்லது வனஸ்பதியைச் சேர்த்து நன்கு க்ரீமாக அடித்துக் கொள்ளவும்.

3. வேக வைத்த வாழைக்காயை, முட்டையுடன் சேர்த்து உரலில் அல்லது மின்சார மிக்சியில் போட்டு மாவாக்கிக் கொள்ளவும்.

4. இந்த மாவில் வெண்ணெய்க் கலவையையும் சேர்த்து நன்கு கலக்கிக் கொள்ளவும்.

5. இக் கலவையையும், மைதா மாவையும் சிறிது சிறிதாகச் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும்.

6. இவ்வாறு பிசைந்த மாவைக் கயிறு போல உருட்டித் திரித்து எண்ணெயிலிட்டுப் பொன்னிறமாகப் பொரிந்தவுடன் எடுக்கவும்.

## வாழைக்காய் பேட்டீஸ்

**தேவையான பொருட்கள் :**

வேக வைத்து மசித்த வாழைக்காய் — 1 கப்

முட்டை — 1

நறுக்கிய வெங்காயம் — 200 கிராம்



நறுக்கிய பச்சை மிளகாய் — 50 கிராம்

மிளகு — 10 கிராம்

மைதா — 10 கிராம்

பட்டை, லவங்கம், பூண்டு (மசாலா) — 10 கிராம்

உப்பு — தேவைக்கேற்றவாறு

**செய்முறை :**

1. முட்டையை உடைத்து நன்றாக அடித்துக் கொள்ளவும்.

2. அதில் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், மசாலாப் பொருட்கள், மசித்த வாழைக்காய் ஆகியவற்றையும் சேர்த்துக் கலக்கவும்.

3. இக் கலவையை சதுரம் அல்லது வட்ட வடிவமான வில்லைகளாகத் தட்டிக் கொண்டு மைதாவில் புரட்டி எடுத்துக் கொள்ளவும்.

4. தோசைக் கல்லில் சிறிதளவு எண்ணெய் தடவி பேட்டீஸ்களை இட்டு, இரு புறமும் பொன்னிறமாகும் வரை விட்டுப் பொரித்தெடுக்கவும்.

## வாழைப் பழ ஐஸ்க்ரீம்

**தேவையான பொருட்கள் :**

நன்றாகப் பழுத்த வாழைப்பழம் (கடைந்தது) — 3 கப்

| | |
|---|---|
| பால், காய்ச்சி ஆற விட்டது | 2 கப் |
| சர்க்கரை | 1/2 கப் |
| பால் பவுடர் | 1 கப் |
| எலுமிச்சம் பழச் சாறு | 1 மேசைக் கரண்டி |

**செய்முறை :**

1. பால் பவுடரில் சிறிது நீர் சேர்த்துக் கலக்கிக் கொண்டு, காய்ச்சி ஆற வைத்த பாலுடன் சேர்த்துக் கொள்ளவும்.

2. இத்துடன் சர்க்கரையையும் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

3. வாழைப் பழக் கூழுடன், எலுமிச்சம் பழச் சாற்றையும் சேர்த்துக் கொண்டு, இதையும் பாலுடன் சேர்த்துக் கலக்கிக்கொள்ளவும்.

4. இப் பழப் பால் கலவையை, குளிர் சாதனப் பெட்டியில் வைத்து ஐஸ் க்ரீமாக உறைய விடவும்.

இந்த ஐஸ்க்ரீமுடன், திராட்சை, செர்ரி, அன்னாசி போன்ற பழங்களையும் சேர்த்து உண்ணலாம்.

## வாழைப்பழ ஷிபான் கேக்

**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| வாழைப்பழம், நன்கு கடைந்தது | 1.5 கப் |
| மைதா | 2 கப் |
| சர்க்கரைப் பொடி | 1 கப் |
| பேகிங் பவுடர் | 1 மேசைக் கரண்டி |
| உப்பு | 1 தேக்கரண்டி |
| முட்டை மஞ்சள் கரு | 4 |
| முட்டை வெண்கரு, நன்றாக அடித்தது | 1 கப் |
| வனஸ்பதி அல்லது வெண்ணெய் | 1/2 கப் |
| ஆரஞ்சுப் பழச் சாறு அல்லது தண்ணீர் | 1/4 கப் |

**செய்முறை :**

1. மைதா மாவுடன் பேகிங் பவுடர், 1/2 கப் அளவு சர்க்கரைப் பொடி, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து, நான்கு அல்லது ஐந்து முறைகள் சலித்துக் கொள்ளவும்.

2. முட்டை வெண் கருவை நன்றாக அடித்துக் கொள்ளவும்.

3. இத்துடன் பாதியளவு சர்க்கரைப் பொடியையும் சேர்த்து அடித்துக் கொள்ளவும்.

4. சலித்த மாவுடன், வனஸ்பதி, ஆரஞ்சுப் பழச் சாறு அல்லது தண்ணீர், அடித்த முட்டை, வெண் கரு ஆகியவற்றையும் சேர்த்துக் கலக்கவும்.

5. மாவுக் கலவையில் சிறிதளவு அடித்துத் தயாரித்த முட்டை வெண் கருவையும் சேர்த்து கேக் தயாரிக்கும் பாத்திரத்தில் விடவும்.

6. அதன் மேல் மிகுந்துள்ள வெண் கருக் கலவையை விட்டு முன்னரே சூடு செய்த அடுப்பில் (baking oven) வைத்து 40 முதல் 60 நிமிடங்கள் வரை 350° பாரன்ஹைட் வெப்ப நிலையில் வேக விடவும்.

## வாழைப்பழ ப்ரௌனிகள்

**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| வாழைப்பழம் நன்கு கடைந்தது | 1 கப் |
| மைதா | 1 கப் |
| வனஸ்பதி அல்லது மார்க்கரின் | 1/2 கப் |
| பொடி செய்த சர்க்கரை | 3/4 கப் |
| முட்டைகள் | 2 |
| சோடா மாவு (பேகிங் பவுடர்) | 1 தேக்கரண்டி |
| உப்பு | 1/2 தேக்கரண்டி |
| கோகோ பவுடர் | 1 தேக்கரண்டி |
| பால் மாவு | 4 தேக்கரண்டி |
| வனிலா எஸ்ஸென்ஸ் | 1/2 தேக்கரண்டி |
| உடைத்த முந்திரி | 1/4 கப் |

**செய்முறை :**

1. வனஸ்பதியில் சர்க்கரையைச் சேர்த்து நன்றாக க்ரீமாக்கிக் கொள்ளவும்.

2. முட்டையையும் சேர்த்து அடித்துக் கொண்டு, கடைந்த வாழைப்பழத்தையும் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

3. மைதா மாவையும் சோடா மாவையும் சேர்த்து நான்கு அல்லது ஐந்து முறை நன்றாகச் சலித்து எடுத்துக் கொள்ளவும்.

4. இத்துடன், பால் மாவு, உப்பு, கோகோ ஆகியவற்றையும் சேர்த்துச் சலித்துக் கொள்ளவும்.

5. இந்த மாவுக் கலவையை, பழக் கலவையில் சிறிது, சிறிதாகச் சேர்த்து, நன்றாக அடித்துக் கலக்கிக் கொள்ளவும்.

6. உடைத்த முந்திரியையும் சேர்த்துக் கலக்கிக் கொண்டு, வெண்ணெய் தடவிய ட்ரேயில் கொட்டி, முன்னரே சூடு செய்த அடுப்பில் (baking oven) வைத்து 30 நிமிடம் வேக விடவும்.

7. ஆற விட்டுச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

திருமதி அ. சுசீலா திருமாறன்
திரு இரா சதாசிவம்
உணவு நுண்ணியல் துறை, தமிழ்நாடு
வேளாண் பல்கலைக் கழகம், கோவை.



# திரைப்பட உலகின் தலைநகர்!

அமெரிக்கா என்றதும் நமது மனக்கண் முன்பாக 'ஆலிவுட்' காட்சியளிப்பது இயற்கையே! ஆலிவுட் தோன்றிய காலம் முதல் கவர்ச்சி என்னும் வார்த்தைக்கே ஒரு தனி மதிப்பு ஏற்பட்டுவிட்டது. ''திரைப்பட உலகின் தலை நகரம் என்று கூறப்படும்'' ஆலிவுட்டில்தான் பல பெரிய நட்சத்திரங்கள் வசிக்கின்றனர். உலகப் புகழ்பெற்ற பல படப்பிடிப்பு நிலையங்கள் ஆலிவுட்டில்தான் உள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் தான் ஆலிவுட் தோன்றியது என்பதைப் படிக்கும்போது அதிசயமாக இருக்கிறதல்லவா? ஆனால், அது தான் உண்மை. முதலாவதாக, **1903**-ல் ஆலிவுட் உருவாகியது. அதற்குப், பிறகு, தண்ணீர் வசதி, அதிகமாகத் தேவைப்பட்டதனால் 'லாஸ் ஏஞ்சல்ஸ்' என்னும் நகரத்துடன் ஆலிவுட் இணைக்கப்பெற்றது. இருந்தபோதிலும் ஆலிவுட்டிற்கென்று ஒரு தனி அஞ்சல் அலுவலகத்தை அமெரிக்க அரசு ஒதுக்கியிருக்கிறது. திரைப்பட நட்சத்திரங்களுக்கு இலட்சக் கணக்கான ரசிகர்கள் எழுதும் கடிதங்கள் இந்த அஞ்சல் அலுவலகத்தில்தான் வந்து குவிகின்றன.

'ஆலிவுட்' என்ற பெயர், திருமதி வில்காக்ஸ் என்பவரால் கொடுக்கப்பெற்றது. கிழக்கத்தியச் சுற்றுப்பயணத்தின்போது இவ்வாறு ஒரு பெயர் இருப்பதாக அவர் கேள்விப்பட்டார். அவருக்கு இதில் மிகவும் விருப்பம் ஏற்பட்டதனால், 'ஆலிவுட்' என்று பெயர் சூட்டிவிட்டார்!

'லாஸ் ஏஞ்சல்ஸ்' நகரில் உள்ள பீவர்லி குன்றுகளில் பருவநிலை பெரும்பாலும் உடல்நலத்திற்கேற்ற வகையில் குளிர்ச்சியாக இருக்கிறது. இத்தகைய அருமையான சுற்றுப்புறத்தில்தான், ஆலிவுட் திரைப்பட நட்சத்திரங்கள் வாழ்கின்றனர். படப்பிடிப்பு நிலையங்கள் இங்கிருந்து சில கற்கள் தொலைவிலேயே இருப்பதனால், நட்சத்திரங்களின் அலுவல்கள் எளிதாகிவிடுகின்றன.

ஆலிவுட் நட்சத்திரங்களின் வீடுகளை மாடமாளிகைகள் என்று கூறமுடியாது. ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் தோட்டம் இருக்கிறது. மரம், செடி, கொடிகள் வீடுகளைச் சுற்றி ஏராளமாக வளர்க்கப் பெறுகின்றன. அவற்றிற்கிடையே சிறு வீடுகள் கட்டப்பெற்றிருப்பதைக் காணலாம். வீடுகள் சிறியவையாக இருந்தபோதிலும், அவற்றில் வசதிகள் அதிகம். பயனற்ற பகுதிகள் அவ்வீடுகளில் மிகவும் குறைவு. தோட்டங்களுக்குள் நீச்சல் குளங்களும் சில வீடுகளில் உள்ளன. ஆலிவுட் நட்சத்திரங்கள் வயதான பிறகும் இளமையான தோற்றத்தோடு இருப்பதற்கு இத்தகைய சூழ்நிலை பெரிதும் உதவுகிறது.

உலகப் புகழ்பெற்றுள்ள பல படப்பிடிப்பு நிலையங்கள் ஆலிவுட்டில் இருக்கின்றன. **'வார்னர் பிரதர்ஸ் பிக்சர்ஸ்' 'வால்ட் டிஸ்னி புரொடக்சன்ஸ்', 'இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ்', 'யுனிவர்சல் இண்டர்நாஷனல்', 'கொலம்பியா பிக்சர்ஸ்', 'பாரமவுண்ட் பிக்சர்ஸ்', 'ஆர். கே. ஓ. ரேடியோ பிக்சர்ஸ்'** போன்ற பல பெரிய படப்பிடிப்பு நிலையங்கள் முக்கியமாகக் காணத்தகுந்தவை. 'எம். ஜி. எம்.' படப்பிடிப்பு நிலையம் ஆலிவுட்டிலிருந்து தொலைவில் உள்ள 'கல்வர் சிட்டி' (Culver City) யில் இருக்கிறது. இந்நிறுவனம்தான் அமெரிக்காவிலேயே பெரிய படப்பிடிப்பு நிலையமாகும். எண்ணெய்க் கிணறுகள் உள்ள பகுதியில் 'எம். ஜி. எம்.' படப்பிடிப்பு நிலையம் கட்டப்பெற்றிருக்கிறது. இப்படப்பிடிப்பு நிலையத்திற்குள் எண்ணெய்யை மேலே கொண்டு வரும் இயந்திரம்இயங்கிக்கொண்டிருப்பதைக் காணலாம்! ஒரு படத்திற்காகக் காட்சிகளை அமைக்கும்போது, அப்பகுதியில் எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டனவாம். உடனே அங்கு இயந்திரங்கள் நிறுவப்பெற்று இன்றளவும் அவை இயங்கி வருகின்றன!

''பாரமவுண்ட்'' படப்பிடிப்பு நிலையத்திற்கு இரண்டு நுழை வாயில்கள் உள்ளன. இவற்றில் ஒன்றிற்கு ''டிமெல்லி கதவு'' என்று பெயர் சூட்டப் பெற்றிருக்கிறது. உலகப் புகழ் பெற்ற **சிசில் பி. டிமெல்லி** இப்படப்பிடிப்பு நிலையத்தோடு நீண்ட காலம் தொடர்பு கொண்டிருந்தார். ''பார்ப்பதற்குப் பழையதாகத் தோன்றும் இந்நிலையத்தில்தான், **'பத்துக் கட்டளைகள்'** படத்தின் பல முக்கியமான காட்சிகள் எடுக்கப்பெற்றன.''

நிறுவனத்தில் கதைகளைத் தேர்ந்தெடுத்து ஆலோசனை கூறுவதற்கென ஒரு தனிப் பிரிவு இருக்கிறது. இப்பிரிவில் ஒரு பெண்மணி பணியாற்றுகிறார். எத்தகைய கதைகள் திரைப்படமாக்கத் தகுதியுடையவை என்பது குறித்து மதிப்பிடுவதில் இப்பெண்மணி வல்லுநர். இவருடைய இல்லத்தில் காகிதக் கட்டுகள் நிறைந்த ஒரு தனி அறை இருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஒரே காகித மயம்! அதைப் பார்த்தால் பத்திரிகை அலுவலகம்தான் நினைவிற்கு வரும். ''இந்த அறையில்தான் என்னுடைய அலுவலில் பெரும் பகுதி நடைபெறுகிறது'' என்று அந்தப் பெண்மணி கூறுகிறார். நம் நாட்டிலும் கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கென ஒரு தனி அமைப்பு இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

**—'செல்வம் கொழிக்கும் சீமை' என்னும் நூலில் திரு சுப. இராமன் அவர்கள்.**

# தென்னிந்தியாவில் உள்ள ஸ்டுடியோக்கள்

| மாநிலத்தின் பெயர் | தற்போது செயல் பட்டுவரும் ஸ்டுடியோக்களின் எண்ணிக்கை |
|---|---|
| தமிழ்நாடு .. .. | 16 |
| ஆந்திரப்பிரதேசம் .. .. | 2 |
| கர்நாடகம் .. .. | 5 |
| கேரளா .. .. | 2 |
| மொத்தம் | 25 |

## தமிழ்நாட்டில் உள்ள ஸ்டுடியோக்கள்

1. அருணாசலம், சென்னை.
2. ஏ. வி. எம்., சென்னை.
3. பரணி, சென்னை.
4. கற்பகம், சென்னை.
5. பிரகாஷ், சென்னை.
6. பிரசாத், சென்னை.
7. சாரதா, சென்னை.
8. சத்யா, சென்னை.
9. சியாமளா, சென்னை.
10. வாசு, சென்னை.
11. வாகினி, சென்னை.
12. வீனஸ், சென்னை.
13. விஜயா, சென்னை.
14. அரசு, சென்னை.
15. மாடர்ன், தியேட்டர்ஸ், சேலம்.
16. ரத்னு, சேலம்.

## ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்டுடியோக்கள்

1. அஜந்தா, ஹைதராபாத்.
2. ஸ்ரீசாரதி, ஹைதராபாத்.

## கர்நாடக மாநிலத்தில் உள்ள ஸ்டுடியோக்கள்

1. அபிமான ஸ்டுடியோ, பெங்களூர்.
2. சாமுண்டீஸ்வரி, பெங்களூர்.
3. ஸ்ரீகண்டீரவ ஸ்டுடியோ, பெங்களூர்.
4. பிரிமியர், மைசூர்.
5. சுஜாதா, பெங்களூர்.

## கேரளத்தில் உள்ள ஸ்டுடியோக்கள்

1. மெரிலேண்ட், திருவனந்தபுரம்.
2. உதயா, ஆலப்புழை.

# தென்னிந்தியாவில் உள்ள திரைப்பட அரங்குகள்!

| மாநிலத்தின் பெயர் | | நிரந்தர அரங்குகள் | பாதியளவு நிரந்தரமான அரங்குகள் | 'டூரிங்' திரைப்பட அரங்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| தமிழ்நாடு | ... | 727 | 72 | 697 | 1,496 |
| ஆந்திரப் பிரதேசம் | ... | 851 | — | 565 | 1,416 |
| கர்நாடகம் | .... | 408 | — | 418 | 826 |
| கேரளம் | ... | 270 | — | 496 | 766 |
| மொத்தம் | ... | 2,256 | 72 | 2,176 | 4,504 |

# அமெரிக்காவில் திறந்தவெளித் திரையரங்குகள்!

அமெரிக்காவில் பொதுவாக, நம் நாட்டிலிருப்பதைப் போல, பெரிய திரைப்படக் காட்சி அரங்குகள் அதிகமாக இல்லை. பெரிய நகரங்களில் மட்டும்தான் சில பெரிய அரங்குகள் உள்ளன. பல திரைப்படக் காட்சி அரங்குகளில் இரண்டு படங்களைச் சேர்ந்தாற் போலக் காண்பிக்கிறார்கள்.

இப்போது திறந்த வெளி அரங்குகள் அமெரிக்காவில் பெயர் பெற்றுள்ளன. திறந்த வெளி அரங்கிற்குக் காரில்தான் செல்ல வேண்டும். கோடு வரையப்பெற்றிருக்கும் இடத்தில் காரை நிறுத்திக் கொள்ளலாம். அதற்கு அருகில் உள்ள ஒரு கம்பத்தில் சிறிய ஒலிபெருக்கிக் கருவி பொருத்தப் பெற்றிருக்கும். அதை எடுத்துக் காரில் செருக வேண்டும். இவ்வாறு படம் பார்ப்பதில் தனிமை இன்பமும், இயற்கைக் காற்று வசதியும் கிடைக்கின்றன. குடும்பத்தோடு செல்லும்போது குழந்தைகள் அழுதாலும், காருக்குள்ளேயே ஒலி அடங்கிவிடுவதனால், அடுத்த காரில் உள்ளவருக்கு அது காதில் விழாது.

ஆலிவுட்டில் உலகப் புகழ் பெற்ற இரு திரைப்படக் காட்சி அரங்குகள் உள்ளன. இவற்றில் ஒன்றான ''எகிப்து அரங்கம்'' முதலில் கட்டப்பெற்று, 1923-அம் அண்டில் திறக்கப் பெற்றது. 'சிட்கிரவ்மான்' கட்டிய இந்த அரங்கில் 1509 பேர்கள் உட்காரலாம்.

இந்த அரங்கில் உள்ள ''டாட்-ஏ-ஓ'' (TODD-A-O) வெண் திரை 52'-6'' அகலமும், 26'.3'' உயரமும் உள்ளது. பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாக உள்ள இந்த அரங்கில்தான் ''பத்துக் கட்டளைகள்'' படம் திரையிடப் பெற்றது.

'சிட்கிரவ்மான்' இரண்டாவதாகக் கட்டிய ''சீனத் திரைப் படக்காட்சி அரங்க''த்தை ஆலிவுட்டிற்குச் செல்லும் வெளி நாட்டினர் பார்க்கத் தவறுவதில்லை. கீழ்த் திசைக் கலையை இந்த அரங்கில் காணலாம். முகப்பில் பளிங்கினால் செய்யப்பெற்ற இரண்டு சீன நாய்களின் உருவங்கள் உள்ளன. சில மரங்களும் அங்கு வளர்க்கப்பெற்று வருகின்றன.

ஆலிவுட் நடிக, நடிகையரின் கை, கால் அடையாளங்கள், கையெழுத்துக்கள் ஆகியவை இங்குள்ள முகப்பு வாசலில் பதிக்கப் பெற்றுள்ளன. ஆகையினால் நட்சத்திரங்களின் மீது பற்றுதல் உள்ள ரசிகர்கள், இந்த அரங்கிற்குச் செல்லத் தவறுவதே இல்லை. அரங்கிற்கு அருகில் ஒரு வணிக நிலையம் நட்சத்திரங்களின் படங்களையும், பல வேடிக்கைப் பொருள்களையும் விற்பனை செய்கிறது.

20,000 பேர்கள் உட்காரக் கூடியதும், உலகிலேயே பெரியதுமான திறந்தவெளி மதிவட்ட அரங்கை இங்கே பார்வையிடலாம். இதற்கு ''ஆலிவுட் பவுல்'' (Holly-wood Bowl) என்று பெயர். இசைத்தட்டு வடிவத்தில் கட்டப் பெற்றுள்ள 'காபிடல் ரிக்கார்ட்ஸ்' (Capital Records) கட்டடமும் மனத்தைக் கவர்வன.

திரைப்பட அரங்கிற்குள் எப்போதும் அமைதி நிலவுகிறது. தரையின்மீது 'வெல்வெட்' கம்பளங்களை விரித்து வைத்திருக்கிறார்கள். உட்காருவதற்கான ஆசனங்கள் மிகவும் வசதியானவை. திரைப்பட அரங்குகளில் காகிதக் குவளையில் கோகோ கோலா (கலர் போன்ற ஒருவகைப் பானம்) குடிப்பதும், சூடான சோளப்பொரி (Pop Corn) யைச் சாப்பிட்டுக் கொண்டே படம் பார்ப்பதும் அமெரிக்கர்களின் வழக்கம். ஆனால், அவற்றை உட்கொண்ட பிறகு காகிதக் குவளைகளையும், அட்டைப் பெட்டிகளையும் அரங்கின் மூலைகளில் வைக்கப் பெற்றுள்ள கழிவுக் கூடைகளில் கொண்டு போய்ப் போடுவதற்கு அங்கு யாரும் தவறுவது இல்லை.

படங்கள் திரையிடப் பெறும் முதலாவது நாளன்று நடிக, நடிகையர் அரங்குகளுக்கு வருகின்றனர். அப்போது கடல்போல மக்கள் கூடுவதைக் காணலாம்.

ஆலிவுட் நட்சத்திரங்கள் உணவு விடுதிகளிலும், வணிக நிலையங்களிலும் சில வேளைகளில் தென்படுகின்றனர். பொது வாழ்வில் அவர்கள் பெரிதும் பங்கு கொள்வதில்லை. அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும், பத்திரிகைச் செய்தியாளர்கள் துப்பறிபவர்களைப் போலக் கவனித்து வருகின்றனர். சில நடிகர்களின் பெயர்களில் மன்றங்களும் அங்கு உள்ளன.

## இலண்டனில் திரைப்பட அரங்குகள்

இலண்டனில் திரைப்படங்கள் காட்டும் திரை அரங்கு பல உள்ளன. வெஸ்ட் எண்டிலுள்ள திரை அரங்குகளில் முதன் முதலில் புதுப்படங்கள் வெளியாகும். அந்தக் கொட்டகைகளில் கட்டணம் அதிகம். தரவாரி வகுப்புகள் உண்டு. அதற்கு ஏற்றாற்போல் கட்டணம் வாங்குவர். அதே படங்கள் சிறிது நாட்கள் ஓடிய தும் இந்நகரின் மற்ற பகுதிகளிலுள்ள நிலையங்களில் காண்பிக்கப்படும். அங்குப் பாதிக்குக் குறைவான கட்டணம்தான் வசூலிப்பார்கள்.

இங்கு ஒரு காட்சிக்கு இரண்டு படங்களும், செய்திப் படமும் காண்பிக்கப்படுகின்றன. பிற்பகல் முதல் நடு இரவுவரை காட்டிய படங்களையே திரும்பத் திரும்பக் காட்டுகிறார்கள். இடைவேளை நேரம் மிகக் குறைவு. இதற்குரிய நுழைவுச் சீட்டுக்களைத் திரைப்பட நிலையங்களில் மட்டும் அல்லாமல், ஏனைய அலுவலகங்களிலும், கடைகளிலும் முன்னரே வாங்கிக் கொள்ளலாம்.

செய்திப் படங்களும், கார்ட்டூன் படங்களும் மட்டும் காண்பிக்கும் தனி நிலையங்களும் உண்டு.

திரையரங்குகளில் ''திரீ-டீ-படங்கள்'' (3-D Pictures) காண்பிக்கிறார்கள். இந்தப் படங்களைப் பார்ப்பதற்கு அவற்றிற்குரிய கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டும். அந்தக் கண்ணாடிகள் இருப்பிடங்களிலேயே செருகப்பட்டுள்ளன!

# மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
# மேலுரமிட மேன்மையான உரம்
# ஸ்பிக் யூரியா




* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46.2%
* மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய. ஸபிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

CAS SPIC 4 TM 77

சிறப்பான
யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.




# நெல்லறுக்க நல்லதொரு கருவி!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில், விசை உழவுக் கருவியை (பவர் டில்லர்) கொண்டு இயக்கக் கூடிய நெல் அறுவடை செய்யும் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக் கருவியானது அறுவடை செய்யும் கத்தி, அறுவடை செய்ய வசதியாகப் பயிரை வளைத்துக் கொடுக்கும் சுற்று வட்டம், அறுவடை செய்த தாள்களை ஒருபுறமாகக் கொண்டு சென்று அடுக்காகவும், வரிசையாகவும் வைக்க ஒரு நகரும் பட்டை ஆகிய மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்த இயந்திரத்தால் தாள்கள் நன்கு அறுக்கப்படுவதுடன், தாள்கள் ஒரு புறமாகக் கொண்டு செல்லப்பட்டு, எடுப்பதற்கு எளிதாக அமையும் வகையில் தொடர்ச்சியாக அடுக்காக விழுகிறது. இந்த இயந்திரம் 3-ஆம் ஆரத்துக்குள் திரும்பக் கூடியதாக இருப்பதால், சிறிய நெல் வயல்களிலும் இதனை உபயோகிக்க இயலும். இக் கருவியைக் கொண்டு அறுவடை செய்வதற்கு முன்பாக வயலில், 4 மீ. X 1 மீ. பரப்பளவில், கை அரிவாள் கொண்டு தாள்களை அறுக்க வேண்டும். விசை உழவுக் கருவியின் சக்கரங்கள் வயலில் நழுவாமலிருக்க, அறுவடை செய்ய வேண்டிய நாளுக்கு 10 முதல் 14 நாட்களுக்கு முன்பாகவே நீர் பாய்ச்சுதலை நிறுத்தி விட வேண்டும்.

இந்த இயந்திரத்தை மணிக்கு 1.6 கி.மீ. வேகத்தில் இயக்க வேண்டும். இதனை இயக்குவதற்கு ஒரு ஆள் மட்டும் போதும். ஒரு நாளைக்கு (8 மணி) இந்த இயந்திரம் 0.8 எக்டேர் (2 ஏக்கர்) அறுவடை செய்யும். இயந்திர அறுவடை செய்யும் பொழுது உதிரும் மணிகளால் ஏற்படும் இழப்பு பலவித நெல் வகைகளுக்கும் 1 விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளது. ஆட்களைக் கொண்டு அறுவடை செய்யும்போது, உதிர்வதால் ஏற்படும் இழப்பு 0.3 முதல் 0.5 விழுக்காடு வரை உள்ளது. இந்த இயந்திரத்தில் பயிர்களைப் பிரித்து விடும் மரப்பலகை ஒன்று பொருத்தப் பட்டிருப்பதால், வயல்களில் குறுக்காகவும் நெடுக்காகவும் அறுவடை செய்ய ஏதுவாகிறது.

இந்த அறுவடை செய்யும் கருவியை எல்லா வகை விசை உழவுக் கருவிகளுடனும் பொருத்தக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தைக் கொண்டு அறுவடை செய்தால், ஒரு எக்டேருக்கு ரூ. 97 மட்டுமே செலவாகும். ஆனால் ஆட்களைக் கொண்டு அறுவடை செய்தால், ஒரு ஏக்கருக்கு ரூ. 140 செலவு ஆகும். ஆகவே, இந்த இயந்திரத்தைக் கொண்டு அறுவடை செய்வதின் மூலம் ஒரு எக்டேருக்கு ரூ. 43 (30 விழுக்காடு) சேமிக்கலாம். இந்த அறுவடை செய்யும் கருவியின் விலை (விசை உழவுக் கருவி இல்லாமல்) ரூபாய் 3,500 ஆகும். விசை உழவுக் கருவியுடன் சேர்த்து வாங்க வேண்டுமென்றால் சுமார் ரூபாய் 18,000 ஆகும்.

—பேராசிரியர் சி. ஆர். சண்முகம்,
ஆராய்ச்சி நிபுணர்
மற்றும் முதல்வர்,

வேளாண் பொறியியல் கல்லூரி,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்
கழகம், கோவை-3.



## யாரோ, இவர் யாரோ?

படத்திலிருக்கும் இவரை யாரென்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? நன்றாக உற்றுப் பாருங்கள்! இவர் ஒரு 'பைலட்' மாதிரித் தெரியவில்லை?

ஆம். இவர் ஒரு 'டம்மி' பைலட்!

இவர், சென்னைத் தாம்பரத்திலுள்ள விமானப் பயிற்சி நிலையத்தில் (Air Force Station) பயிற்சி பெறும் மாணவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கிறார். இயந்திரத்தின் மூலம் இயங்கும் இந்தப் பொம்மை விமானமோட்டியை வைத்து மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

உயரே விமானத்தில் பறந்து செல்கிறார் விமானி. விமானத்தில் ஏதோ கோளாறு. விமானி தப்பித்துக் கொள்ள வேண்டும். அந்த நிலைமையில் விமானி பத்திரமாகப் பூமிக்கு இறங்க முடியுமா?

முடியும்!

சென்னைக் கோட்டையிலுள்ள மக்கள் தொடர்பு அலுவலர் மேஜர் பி. கே. லோகநாதன் அவர்கள் கூறுகிறார் :

''விமானத்தில் இயந்திரக் கோளாறினாலோ, அல்லது விமானம் பனி மூட்டங்களில் சிக்கி வழி தடுமாறிக் குன்றுகளில் மோதுகிற போதோ, போர்க் காலங்களில் எதிரிகளால் சுடப்படுகிற சமயத்திலோ விமானி தப்பித்துக் கொள்ள முடியும்.

''இதற்கு விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கிச் சாதனம் ஒன்று உதவுகிறது. அதன் மூலமாக விமானி தன் இருக்கையோடு (சீட்) மேலே எழும்பிச் சென்று, பிறகு 'பாரசூட்' உதவியினால் கீழே இறங்கி வர முடியும்.''

## இன்னொரு சோவியத் யூனியன்!

இந்தியா விடுதலை பெற்ற பின் மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாம் இன்னொரு சோவியத் யூனியனை இந்தியாவில் உருவாக்கியுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலியா என்ற கணக்கில் மக்கள் பெருகிக் கொண்டே போகிறார்கள். இப்படி இருந்தும், மக்கள் பயங்கர பின் விளைவுகள் குறித்துக் கவலைப்படவில்லை.

1921ஆம் ஆண்டு இந்தியாவின் மக்கள் தொகை 251 மில்லியனாக இருந்தது. 1971ல் இது 548 மில்லியனாகப் பெருகிவிட்டது. 50 ஆண்டுகளில் மக்கட் பெருக்கம் 118 சதவீதம் அதிகரித்துவிட்டது. கடந்த 20 ஆண்டுகளில் மக்கள் தொகை மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் மக்கள் தொகை 361 மில்லியனிலிருந்து 548 மில்லியனாக 50 சதவீதம் உயர்ந்துள்ளது. 10 ஆண்டுகளுக்கொரு முறை 11 சதவீதமாக உயர்ந்து வந்த மக்கள் தொகை 1950க்குப் பின் 10 ஆண்டுகளுக்கொரு முறை 25 சதவீதமாகப் பெருகியது. இப்படியே போய்க்கொண்டிருந்தால், கி.பி. 2001ல் இந்தியாவில் மக்கள் தொகை 1,070 மில்லியனாகப் பெருகிவிடும்! பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை இருபது சதவிகிதம் குறைந்து கொண்டே சென்றால் கூட கி.பி. 2001ல் இந்திய மக்கள் தொகை சுமார் 950 மில்லியனாக இருக்கும்.

திட்டக் குழு மக்கள் தொகை மதிப்பீடு நிபுணர் குழுவை நியமித்தது. அந்தக் குழு கடந்த ஆண்டு சில மதிப்பீடுகளை வெளியிட்டு உள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டிற்கு ஒரு சதவிகிதம் என்ற விகிதத்தில் குறையும் என்று அவர்கள் கருத்து வெளியிட்டார்கள். அந்தக் கணக்குப்படி 1991 வாக்கில் மக்கள் தொகை 754 மில்லியனாக இருக்கும். அப்போது பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 21 ஆகவும், இறப்பு விகிதம் ஆயிரத்திற்குப் பத்தாகவும் இருக்கும். ஆனால், இந்த விகிதங்கள் இப்போது திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஐந்தாண்டுத் திட்ட முடிவில் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு முப்பதாகக் குறைய வேண்டும் என்றும், அதற்குப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் 0.5 சதவிகிதம் மக்கள் தொகை குறையவேண்டும் என்றும் புதிய மதிப்பீடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

—ஆதாரம் : பத்திரிகைத் தகவல் அலுவலகம்.



# அருங்காட்சியகத்தில் அரிய இசைக் கருவிகள்!

**பூ**ரி,

எக்காளம்,

கொம்பு,

சிரிங்கா,

காகலா,

இவையெல்லாம் புது வகை உணவுப் பொருள்களோ என்று எண்ணி விடாதீர்கள்!

இவை பண்டைக்கால—கிடைத்தற்கரிய இசைக் கருவிகளின் பெயர்களேயாகும்.

இந்த இன்னிசைக் கருவிகளை நாம் பார்க்க முடியுமா?

சென்னை அரசினர் அரும் பொருட் காட்சியகத்துக்குச் சென்றால் இவைகளைப் பார்த்து மகிழலாம்.

அண்மையில் பூரி, எக்காளம், கொம்பு, சிலம்பு போன்ற அரிய இசைக் கருவிகள் சில சென்னை அருங்காட்சியக இசைக் கருவிகள் கூடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இப் புதிய இசைக் கருவிகள் அருங்காட்சியக முகப்புக் கட்டடத்தில் அக்டோபர் 12ஆம் தேதி முதல் இரண்டு மாதங்களுக்குச் சிறப்புக் கண்காட்சியாக வைக்கப் பட்டிருந்தன. இவற்றுள் சில விலைக்கும், சில வெகுமதியாகவும் திரு கொடூர் இராமமூர்த்தி (இயக்குநர், கோரா சுதேசி கைவினைக் கலை நிறுவனம், சென்னை-10) அவர்களிடமிருந்து பெறப் பட்டன.

இந்த இசைக் கருவிகள் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

**எக்காளம்** இது ஒன்றோடு ஒன்றாகப் பொருத்தப் பட்ட நான்கு பித்தளைக் குழல்களால் அமைந்துள்ள நீண்ட குழலாகும். இக் கருவியின் குறுகிய முனையில் ஊதுகையில் ஒரு வித கூரிய ஒலி வெளிப்படுகிறது. கோயில் ஊர்வலங்களில் இது பெரிதும் பயன் படுத்தப்படுகிறது.

**பூரி :** இது திருக்கோயில்களிலும் மடங்களிலும் பயன்படுத்தப் படும் வளைந்த பித்தளைக் கொம்பாகும்.

**கொம்பு:** இந்தியாவில் காற்றுக் கருவிகள், அதிலும் குறிப்பாக கொம்பு வகைக் கருவிகள் திறந்த வெளியில் பயன்படுத்துவதற்கென்றே செய்யப்பட்டவை. உலோகக் கொம்புகள் செய்வதற்கு முன்பு ஆதியில், எருமைகளின் வளைந்த கொம்புகள் பயன் படுத்தப்பட்டன.

கொம்பு, சிரிங்கா, காகலா போன்ற ஊதுகுழல்கள், பண்டை மனிதன் தனது குரலோசையைப் பேசியும், பாடியும், நன்கு எழுப்பி ஒலிக்க பயன்படுத்திய ஒலிமிகுப்பான் குழலின் வடிவமைப்பிலிருந்து வளர்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த எளிய ஒலி மிகுப்பான் குழலிலிருந்து ஊதுபவரின் உதடுகளால் உருவாக்கப்படும் அதிர்வலைகள் செல்லும் காற்றுக் குழல் உடைய கொம்புகள் பின்பு வளர்ச்சியுற்றன.

அச்சத்தைத் தோற்றுவிக்கும் கொம்பொலி பழங்குடிகளின் சடங்குகளோடும், மாந்திரிக முறைகளோடும் இணைந்து இசைக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக ஊடுருவிச் செல்லும் ஒலி போர்ப் படையை அழைக்கவும், முக்கிய நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கவும், விழா, ஊர்வலம் போன்றவற்றை அறிவிக்கவும் பொதுவாகப் பயன் படுத்தப்படுகிறது. கொம்புகள் தனியாகவும், மத்தளம் போன்ற முழக்கத் தாளங்களோடும் இணைத்து இசைக்கப்படுகின்றன.

**பூசாரியின் கைச்சிலம்பும், பூவையரின் கால் சிலம்பும்**

கைச் சிலம்பு, கை விரல்களால் பற்றப்பட்டு, கையைத் தாளத்திற்கேற்ப முன்னும் பின்னும் அசைவித்து ஒலிக்கப்படும். இது கிராம தேவதைகள், மாரியம்மன் ஆகியவற்றின் திருக்கோயில்களில் இசைக்கப்படுகிறது.

கால் சிலம்பு, கால்களில் அணியப்படுவது, நடன மங்கையர் முன்னும் பின்னும் அசைந்தாடுகையில் அவ்வசைவுகளுக்கேற்ப கிண்கிணி நாதம் எழுப்பப்படும்.

# காற்று நிகர் மென்மை வண்ணத்துப் பூச்சியின் எழில் வண்ணம்

## கோ-ஆப்டெக்ஸ்

அச்சிட்ட நூல் சேலைகள்

உண்மைதான்! மென்மையான
அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன
டிசைன்கள்—யமுனா, அஜந்தா,
சாமுண்டி-உள்ளங்கவர்
வகைகள்—பரவசமூட்டும்
வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட சேலைகள் இன்றைய
நாகரீகமாகத் திகழ்பவை!



கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி



# ஆடு வளர நாடு வளரும்!

தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை வாய்ந்த மாநிலங்களில் ஒன்றாகும். உணவு உற்பத்தியிலும், கல்வி அறிவிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது; மின் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. இவ்வளவு சிறப்புகள் இருந்தும் தமிழ்நாட்டின் பொருளாதாரம் குறைந்து வருகின்றது. காரணம் தமிழ்நாட்டிலுள்ள 15 மாவட்டங்களில், 10 மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் வறட்சி நிலையில் உள்ளன. வறட்சி உள்ள மாவட்டங்களில் பொருளாதார மேம்பாடு காணவேண்டுமென்றால், அங்குள்ள எளிய மக்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டும். அதற்கான திட்டங்களை நாம் அமைக்க வேண்டும். வறட்சி மாவட்டங்களில் ஆடுகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றன. இந்த ஆடுகளை வளர்ப்போர், வாழ்க்கையில் நலிந்த மக்கள். இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் உள்ள ஆடு வளர்ப்போர் இடம் பெயர்வோர்களாகவும், பெரும்பாலோர் கல்வி அறிவு இல்லாதவர்களாகவும் உள்ளனர்.

**ஆடுகள், விவசாயிகளுக்கு ஒரு நடமாடும் வங்கி போல் அமைகின்றன என்றால் மிகையாகாது.** விவசாயிகள் உபரிஆடு விற்றுப் பலன் அடைகின்றனர். மேலும் ஆடுகளை வயல்களில் கிடை போடுவதன் மூலமும் ஊதியம் கிடைக்கின்றது. ஆனால் ஆடு வளர்ப்பு மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் குறைவாக உள்ளது என்பது உண்மை. அதற்கு முக்கிய காரணம் நமது மாநில ஆடுகளின் உற்பத்தித் திறன் மிகக் குறைவானது. மேலும் இந்த ஆடுகள் வயிற்றுப் பூச்சிகளாலும், குடற் பூச்சிகளாலும் வளம் குன்றி, நோயுற்று நலிந்து விடுகின்றன. இந்த நிலை மாற வேண்டுமென்றால் ஆடுகளின் உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும். ஆடுகளுக்கு ஏற்படும் நோய்களை உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்துத் தவிர்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் 1974 - ஆம் ஆண்டில் கால்நடைக்கணக்கெடுப் பின்படி 54 இலட்சம் ஆடுகள் இருக்கின்றன. இது இந்தியாவில் உள்ள ஆடுகளின் எண்ணிக்கையில் 11 சதம் ஆகும். 1966-ஆம் ஆண்டுக் கணக்கின்படி தமிழ்நாட்டில் 66 இலட்சம் ஆடுகள் இருந்தன. கடந்த 8 ஆண்டுகளில் ஆடுகளின் எண்ணிக்கை 18சதவிகிதம் குறைந்திருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம், ஆடுகள் பராமரிப்பில் குறைவான கவனமும், வெக்கை நோய் போன்ற நோய்களும், உற்பத்தியைவிட அதிகமான ஆடுகளை உணவுக்குப் பயன்படுத்துவதும் ஆகும். இந்தச் சூழ்நிலை மறைய, ஆடுகளின் உற்பத்தித் திறனும், எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டும். தமிழ்நாடு கால்நடை வளர்ப்புத் துறை, ஆடு வளர்ப்புத் திட்டங்களை இந்தக் குறிக்கோள்களுடன் செயலாற்றி வருகின்றது.

தமிழ்நாட்டில் சாத்தூர், சின்ன சேலம், ஆகிய இரண்டு இடங்களில் ஆட்டுப் பண்ணைகளும் திருநெல்வேலி, புதுக்கோட்டை, ஒசூர், செட்டிநாடு ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் ஆட்டுப் பிரிவுகளும் இருக்கின்றன. இந்தப் பண்ணைகளில் மாண்டியா, மேச்சேரி, கீழ் கரிசல், இராமநாதபுரம், வேம்பூர்

இன ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. ஓசூர் பண்ணையில் மேல்நாட்டு இனமான கோரிடேல் கிடாவிற்கும், மாண்டியா ஆடுகளுக்கும் கலப்பின விருத்தி ஆராய்ச்சி நடைபெறுகின்றது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காட்டுப் பாக்கத்தில் சென்னை சிவப்பு ஆடுகளின் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உதகை அருகில் ஆடுகள் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இந்த இரண்டு ஆராய்ச்சி நிலையங்களும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்குகின்றன. இந்தப் பண்ணைகளில் இருந்து திறமான ஆடுகள் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விற்கப்படுகின்றன. மேலும், ஆடுகள் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இப்பண்ணையில் உள்ள உபரி ஆடுகள் விற்கப்படுவது ஒரு முக்கியமான அம்சம் ஆகும்.

பொதுவாக ஆடுகளைத் தாக்கும் தொற்று நோய்கள் குறைவாகவே உள்ளன. அடைப்பான், தொண்டை அடைப்பான், துள்ளு நோய், ஆட்டு அம்மை, வெக்கை நோய் ஆகியவைகளே ஆடுகளைத் தாக்குகின்றன. இவைகளில் தீவிரமானது வெக்கை நோயும், ஆட்டு அம்மையும்தான். இந்த நோய்களுக்கும் ஏனைய நோய்களுக்கும் தடுப்பு ஊசிகள் இராணிப்பேட்டை அரசினர் தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, கால்நடைத் துறை ஊழியர்கள் உரிய காலங்களில் ஆட்டுக் கிடையிலேயே ஊசி போடுகின்றார்கள்.

ஆடுகளின் இயற்கையான எதிரி குடற் பூச்சிகளாகும். சுமார் 12 விதமான குடற் பூச்சிகள் ஆடுகளைப் பாதிக்கின்றன. குடற் பூச்சிகளைக் கொல்லும் நல்ல பூச்சி மருந்துகள் கிடைப்பது ஆடுகள் வளர்ப்போருக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கிறது. கால்நடை வளர்ப்புத் துறையினர் இந்த மருந்துகளை ஆடுகளுக்கு மாரிக் காலத்தின் முன்பும் பின்பும் கொடுப்பதற்கு மருந்தகங்களில் கிடைக்க வகை செய்துள்ளனர். ஆடு வளர்ப்போர்கள் எளிய மக்களாக இருப்பதால், மானியமும் நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் குறைந்த வட்டியில் கடன் உதவியும் கிடைக்க, கால் நடைத் துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்கின்றனர்.




நமது மாநிலத்தில் சுமார் 2.25 இலட்சம் குடும்பங்கள் ஆடு வளர்ப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. இவர்கள் கிடையில் ஆடுகள் எண்ணிக்கை மிகக் குறைவு. குட்டிகளோடு சேர்த்து 25க்கு மேல் இருக்காது. இந்த ஏழைக் குடும்பங்களை வளம் பெறச் செய்யத் தற்சமயம் ஆடு வளர்ப்புத் திட்டங்கள் பல மாவட்டங்களில் செயல்படுகின்றன.

1. வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் 83 இலட்சம் ரூபாய் செலவில் 39 ஆடு வளர்ப்புச் சங்கங்கள் செயல்படுகின்றன. 2,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்தத் திட்டத்தால் பலன் பெறுகின்றனர். இந்தச் சங்கங்கள் 54,000 ஆடுகளுக்கு மேல் வளர்க்கின்றன. 39 சங்கங்களில் 35 சங்கங்கள் இலாபகரமாகச் செயல்படுகின்றன. மலைவாழ் மக்களுக்காக 15 இலட்சம் ரூபாய் செலவில் ஆடு வளர்ப்புக்காக நீலகிரி மாவட்டத்தில் நான்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 200 ஆட்டுக் கிடைகள் சென்ற ஆண்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 200 ஆடு வளர்ப்போர்கள் பலன் பெற இலக்கிடப்பட்டிருக்கின்றன.

2. பழங்குடி மக்களின் நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பிற்பட்ட மலைப் பகுதிகளில் 2.25 இலட்சம் ரூபாய் செலவில் 356 விவசாயிகள் ஆடு வளர்ப்பில் பலன் பெறுகின்றனர். பழங்குடி விவசாயிகளுக்கு ஒரு கிடாவும், 10 ஆடுகளும் வாங்க வசதி அளிக்கப்பட்டிருக்கின்றது. கல்ராயன், ஏலகிரி, ஜவ்வாது, ஏர்க்காடு, சித்தேரி மலைப்பகுதிகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 4 இலட்சம் ரூபாய் செலவில் 800 பழங்குடி மக்கள் ஆடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பலன் பெறுகின்றனர்.

3. வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், ஆடு வளர்ப்புத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் சுமார் 1,000 விவசாயிகள் ஆட்டுக் கிடைகள் அமைக்க, சுமார் 8 இலட்சம் ரூபாய் மானியமாகவும் 25 இலட்சம் ரூபாய் கடனுதவியாகவும் வழங்க திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தப்பட்டு கின்றன. செட்டி நாடு பண்ணையிலுள்ள ஆட்டுப் பிரிவும், சாத்தூர் பண்ணையும் விரிவாக்கப்படுகின்றன.

இராமநாதபுரம் பகுதியில் ஆடுகள் கலப்பின விருத்திக்கு மேல் நாட்டு கோரிடேல் கிடாக்கள் ஓசூர் பண்ணையில் வளர்க்கப்பட்டுப் பின்னர் சாத்தூர்ப் பண்ணையின் மூலம் விநியோகிக்கப்படவிருக்கின்றது.

4. இந்திய அரசின் கால்நடைச் சிறப்புத் திட்டத்தின் கீழ் 1976-77ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை வளர்ப்புத் துறை 3 மாவட்டங்களில் 9,000 ஆட்டுக்கிடைகள் அமைக்கத் திட்டம் வகுத்திருக்கிறது. இந்தச் சிறப்புத் திட்டம் வட ஆர்க்காடு, சேலம், திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுகிறது. சிறு விவசாயிகள் 750 ரூபாய் மானியமாகவும், மிகச்

சிறிய விவசாயிகளும் நிலம் இல்லாத விவசாயிகளும் ரூபாய் 1000 மானியமாகவும் பெறுகின்றனர். ஓர் ஆட்டுக் கிடையில் ஒரு கிடாவும் 20 ஆடுகளும் இருக்கும். ஒரு கிடாவும் 20 ஆடுகளும் கொண்ட ஓர் ஆட்டுப் பண்ணை அமைக்க ரூபாய் 3,000 தேவைப்படும். அரசு அளிக்கும் மானியம் போக மீதிப் பணத்தை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு வங்கிகள்மூலம் குறைந்த வட்டியுடன் முன்பணமாக கிடைக்கத் திட்ட அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். இது போன்ற நல்ல திட்டங்கள் மூலம் ஆடு வளர்ப்பில் இலாபம் பெற 10 கட்டளைகள் உள்ளன.

1. நல்ல கிடாக்களை மந்தையில் விடவேண்டும்.

2. 1.5 ஆண்டு வயது வந்த பெட்டை ஆடுகள்தான், மந்தையில் கிடாவுடன் விடப்படவேண்டும்.

3. நல்ல வளமான பெட்டை ஆடுகளை உங்கள் கிடையில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

4. சுமார் 40 பெட்டை ஆடுகளுக்கு ஒரு கிடா போதுமானது.

5. நல்ல புல் வளரும் மாதங்களில் ஆடு குட்டி ஈனுவது சிறந்தது.

6. ஒரு நாளைக்கு ஆடுகளை 12 மணி நேரமாவது மேய்ப்பது அவசியம்.

7. குட்டிகளைத் தனித்து மேய்ப்பது நல்லது.

8. ஆடுகளை வெய்யில் காலங்களில் மூன்று முறை தண்ணீர் காட்டுவதும் மற்றக் காலங்களில் 2 முறை தண்ணீர் காட்டுவதும் அவசியமாகும்.

9. நல்ல ஆடுகளையும் தரம் குறைந்த ஆடுகளையும் அவ்வப்போது நீக்குவது கிடையின் தரத்தை உயர்த்தப் பெரிதும் உதவும்.

10. உங்கள் சரகத்தில் ஏற்படக் கூடிய தொற்று நோய்களுக்குத் தடுப்பு ஊசி போட்டு, வருமுன் காப்பது உங்கள் கடமை. வயிற்றுப் பூச்சி மருந்துகளை மழைக் காலங்களுக்கு முன்பும் பின்பும் கோடைக் காலத்தில் ஒரு முறையும் ஆடுகளுக்குக் கொடுப்பது உங்கள் இலாபத்தை அதிகரிக்க வழி செய்யும்.

''ஆடு வளர நாடு வளரும்;
நாடு வளர நாம் வளர்வோம்''

# வாழை முடிக்கொத்து நோயை ஒழிக்க...

பழனி மலைப் பகுதியில் சுமார் 35,000 ஏக்கர் பரப்பில் மலை வாழை பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் இப்பகுதியில் முடிக் கொத்து நோயால் வாழைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டு அழிக்கப்பட்டு காபித் தோட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இந் நோய் ஒரு வகை நச்சுயிரியினால் ஏற்படுத்தப்படுகிறது. இந் நோய்க் கிருமிகள் 'பெண்டலோனியா' எனப்படும் அசுவினியினால் ஒரு வாழை மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குப் பரப்பப்படுகிறது. இந் நோயால் பாதிக்கப்பட்ட வாழை மரத்தின் இலைகள் யாவும் ஒரே கொத்தாகக் காணப்படும். வாழை சரியாக இராது. அப்படியே தார் வந்தாலும் மெலிந்து சிறுத்துக் காணப்படும். இந் நோய் பழனி மலைப் பகுதியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியதோடல்லாமல் சமீப காலத்தில் சிறுமலையிலும் தொற்று நோயைப் போல் தொற்றிக் கொண்டது. இதனால் இப் பகுதியிலுள்ள 5,000 ஏக்கர் வாழைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. சமவெளிப் பகுதிகளில் பயிரிடப்படும் சில வாழை இரகங்களிலும் இந்நோயால் சேதம் அதிகம் ஏற்படுகிறது.

இந் நோயைப் பரப்பும் அசுவினிப் பூச்சியைக் கட்டுப்படுத்தத் தக்க பூச்சிக் கொல்லி மருந்தைக் கண்டறியும் பொருட்டு தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தடியன் குடிசை தோட்டப்பயிர் ஆராய்ச்சி நிலையத்தின் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வாய்வின் முடிவுகள் கீழே தரப்பட்டு உள்ளன.

(1) புதிதாக வாழை நடவு செய்யும்போது இவ்வகை நச்சுயிரி நோயால் தாக்கப்படாத வாழைத் தோட்டங்களிலிருந்து கன்றுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(2) முதல் முதலாக இந் நோய் கண்ட மரங்களில் மண்ணெண்ணெய்யை ஊற்ற வேண்டும். பின்பு வேருடன் எடுத்து, எரித்து விட வேண்டும். ஒரு வாரத்திற்கு ஒரு முறையாவது வாழைத் தோட்டத்தை நன்கு கூர்ந்து பார்வையிட வேண்டும்.

(3) அசுவினியைக் கட்டுப்படுத்த மெடாசிஸ்டாக்ஸ் அல்லது மெடாசிட் அல்லது நுவக்ரான் அல்லது தயோடான் அல்லது ஜோலோன் அல்லது ஃபெஸ்டால் மருந்தை 4—5 வாரங்களுக்கு ஒரு முறை தெளித்தல் வேண்டும். டர்ஸ்பான் அல்லது டைனுக்ரான் அல்லது ரோகார் மருந்தை 3—4 வாரங்களுக்கு ஒரு முறை வீதமும் தெளித்து இப் பூச்சிகளை ஒழிக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மருந்தடிக்கும்போது வாழை மட்டைகளில் இடுக்கில் மருந்து செல்லுமாறு அடிக்க வேண்டும். இலைகளின் பரப்பில் மருந்தடிப்பதால் யாதொரு பயனும் இல்லை. ஏன் எனில் இவ் வகை விஷப் பூச்சிகள் மட்டை இடுக்கில் தான் காணப்படும். இந்தப் பூச்சி கொல்லிகளை 0.5 சத வீரியத்தில் அடித்தால் நல்ல பலன் கிடைக்கும் எனப் பரிந்துரை செய்யப்படுகிறது.

குறிப்பு : பூச்சி மருந்துகளை அடிக்கும்போது மெடாசிஸ்டாக்ஸ் 2 மில்லி அல்லது மெடாசிட் 1 மில்லி அல்லது நுவக்ரான் 1.5 மில்லி அல்லது தயோடான் 1.5 மில்லி அல்லது ஜோலோன் 1.5 மில்லி அல்லது ஃபெஸ்டால் 1 மில்லி அல்லது டர்ஸ்பான் 2.5 மில்லி அல்லது டைமக்ரான் 0.5 மில்லி அல்லது ரோகார் 1.6 மில்லி என்ற அளவில் எடுத்து ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

# சமுதாய மறுமலர்ச்சிக்கு உதவும் சக்தி வாய்ந்த சாதனம் திரைப் படம்



மத்திய செய்தி—ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு எல். கே. அத்வானி அவர்கள் திரைப்படத் திருவிழா'78-ஐத் துவக்கி வைக்கும் முகத்தான் குத்து விளக்கேற்றி வைத்தார்கள்

## தமிழக முதல்வரின் தலைமையுரை

மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர்
திரு அத்வானி அவர்களே!
வருகை தந்துள்ள அனைத்து நாட்டுப் பிரதிநிதிகளே!
தாய்மார்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இந்த உலக திரைப்பட விழாவிற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் தமிழக மக்களின் சார்பில் பேரன்போடும் பெரு மகிழ்ச்சியோடும் வரவேற்பதிலே பெருமையடைகிறேன். மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் சார்பில் திரைப்பட விழாத் துறையினர் இந்த விழாவினைக் கொண்டாடுவதற்கு தமிழகத்தின் தலைநகரான சென்னையைத் தேர்ந்தெடுத்தமைக்காக அவர்களுக்கு நான் முதலில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மனித உணர்வை கலைச்சிறப்புடன் வெளியிட இன்றைய உலகில் திரைப்படம் ஆற்றல்மிக்க ஒரு கருவியாக பயன் பட்டு வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். பல்வேறு மக்களையும் ஒன்று கூட்டி, தங்களது கலாச்சார உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளவும், ஒரு நாட்டின் கலாச்சாரச் சிறப்பினை மற்ற நாட்டினர் அறிந்து பாராட்டவும் இதுபோன்ற விழாக்கள்

மக்களுக்கும் கலைஞர்களுக்கும் உதவுகின்றன. இந்தியா உயர்வான தொன்மைக் கலாச்சாரம் உடைய ஒரு துணைக்கண்டம் என்பதை உங்களில் பலர் அறிந்திருக்கக்கூடும். அத்தகைய சிறப்புப்பெற்ற இந்தியத் திருநாட்டில் இந்த விழா நடைபெறவிருக்கின்ற தமிழகம் மூத்ததொரு கலைப் பாரம்பரியத்திற்கு உரிமையுடையது என்பதையும் இந்த நேரத்திலே உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமையாகும். உயர்ந்த சிந்தனைகளையும், ஆழ்ந்த எண்ணங்களையும் கலைவடிவங்களாக வெளியிடுவது எங்கள் நாட்டைப் பொறுத்தவரை புதிய விஷயம் அல்ல. திரைப்படக் கலையிலிருந்து, விஞ்ஞான உதவிகளால் விளையும் தொடர்புகளை நீக்கிவிட்டால், இந்தக் கலைக்கு அடிப்படையாக அமைவது நாடகக் கலையாகும். நாடகக்கலையின் பரிணாமவளர்ச்சிதான் திரைப்படக் கலை. இந்தக் கலையோடு தொடர்புகொண்ட, இந்தக் கலையை உருவாக்கி உயிரூட்டும் கலைஞர்களை இரண்டு பிரிவாகப் பிரித்தால், ஒன்று நடிப்புக் கலைஞர்கள்... மற்றொன்று தொழில்நுட்பக் கலைஞர்கள். இந்த நடிப்புக்கலைஞர்களை ஆரம்பத்தில் உருவாக்கியது நாடகமேடை. தொழில்நுட்பக்கலைஞர்களை உருவாக்கியது விஞ்ஞான அறிவு... ஆகவே இந்தத் திரைப்படக்கலைக்கு அடிப்படையாக அமைந்த நாடகக்கலையும், அந்தக் கலைக்கு உயிரூட்டிய கலைஞர்களும் நீண்டகாலத்திற்கு முன்பே பெருமை சேர்த்த ஒரு நாட்டிற்குத் தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

இந்த விழா நடைபெறுகிற இந்தியாவின் இந்தப்பகுதியில்—தமிழகத்தில் —ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நாடகக்கலை ஆக்கம்பெற்று விளங்கியது. அதனால், நடிப்புக் கலைஞர்கள் தங்களின் ஆற்றல்மிக்க கலைப்பணிமூலம் மக்கள் சமுதாயத்தை மகிழ்வித்ததோடு சமுதாயமாற்றங்களுக்கும் தங்களின் கலைப்பணியைக் காணிக்கையாக்கினார்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில்கூட தமிழ் நாடகக்கலைஞர்கள் பாமர மக்களிடம் தேசீய உணர்ச்சியை ஊட்டி, பட்டிதொட்டிகளிலெல்லாம் நாடகம் நடத்தி மக்களை அரசியல் விழிப்புணர்ச்சி பெறச் செய்தனர். சுதந்தரப் போராட்டத்தினை அடக்கி ஒடுக்க அன்று இந்தியாவை ஆண்டவர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டபொழுது, நாடகக் கலைஞர்கள் பலர் ராஜத் துரோகக் குற்றத்தின்கீழ் கைது செய்யப்பட்ட சூழ்நிலையும், இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில், இருந்தது. இது தமிழ் நாட்டிற்கோ இந்தியாவிற்கோ மட்டும் உரிமையான வரலாறு அல்ல. உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளிலே அந்தந்த காலகட்டங்களில் கலைஞர்கள் தங்கள் கலைப்பணியை நாட்டுப் பணியாக மாற்றிக்கொண்ட வரலாறுகள் நம்மிடையே உண்டு.

எண்ணங்களை வெளியிடும் கருவியாகப் பயன்படுவதில் நாடகத்துறைக்கு இல்லாத பல வசதிகள் திரைப்படத்துக்கு உண்டு. உலகத்தின் மூலைமுடுக்குகளில் வாழும் மக்களிடையே

**திரைப்படத் திருவிழா'78-ன் துவக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையுரையாற்றினார்.**



ஒரே நேரத்தில் சென்று அடையும் மகத்தான சாதனம் திரைப் படம். வாழ்க்கைச் சம்பவங்களைத் தொகுத்து அளிப்பதோடு மட்டுமின்றி அறிவூட்டும் சாதனமாகவும் திரைப்படத்தைப் பயன் படுத்த முடியும் என்பதை உலகெங்கணும் உள்ள கல்வி நிபுணர் கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்களை கவர்ந்திழுக்கும் ஆற்றலில் திரைப்படத்துக்கு இணையாக வேறொரு கலையைச் சொல்லமுடியாது. இந்தியாவில் இதன் சக்தி அடி நாளில் இருந்து உணரப்பட்டு வந்திருக்கிறது. தாதா சாகிப் பால்கே இந்திய திரைப்படத் தொழிலில் ஒரு முன்னோடியாக விளங்கியவர். அவர் நடத்திய போராட்டங்களும், சாதனைகளும் இந்தியத் திரைப்பட வரலாற்றில் ஒளிமிக்கதொரு அத்தியாய மாகும். அவர் அமைத்த பாதையில் புதிய பல சாதனைகள் புரிந்த படத்தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் உண்டு. இவர் களில் நம்முடைய காலத்தில் மூன்று பெருமக்கள் என்னுடைய நினைவுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வருகிறார்கள். மராட்டிய மண்டலத்தில் திரு சாந்தாராம் அவர்களும், வங்காளத்தில் திரு சத்தியஜித் ரே அவர்களும், தமிழகத்தில் காலஞ்சென்ற திரு எஸ். எஸ். வாசன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தியத் திரைப்படத்துறைக்கு தேசீய, சமுதாய, நோக்கத்தை உருவாக் கிக் கொடுத்த சிறப்புக்கு உரியவர் திரு சாந்தாராம். ஏழை களின் எளிய வாழ்வை, சமுதாய முரண்பாடுகளை எடுத்துக் காட்டி சர்வதேச அரங்கில் இந்தியத் திரைப்படத்திற்கு தனி யானதொரு மரியாதையை பெற்றுக்கொடுத்தவர் சத்தியஜித் ரே. விஞ்ஞான வசதி குறைவாக இருந்த நிலையிலும், உலக வளர்ச்சி யோடு போட்டிபோட்டு பிராந்தியமொழிப்படங்களை மிகப்பெரிய படங்களாகத் தயாரித்துப் புகழ்பெற்றவர் திரு வாசன் அவர்கள்.

தொழில்நுட்பத் துறையிலே தங்களுடைய ஆற்றலின்மூலம் இந்தியத் திரைப்படக்கலையை உயர்த்தியவர்கள் இவர்கள். இதே போன்று உலக முழுவதிலும் அரும்பெரும் தொழில் நுட்பக் கலைஞர்கள் தோன்றி, தங்கள் நாட்டின் புகழை உயர்த்தியிருக் கிறார்கள். அவர்களின் பெயர்களை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கமாட்டீர்கள்.



**சென்னை கலைவாணர் அரங்கில் 3-1-1978 அன்று நடைபெற்ற திரைப் படத் திருவிழா '78-ன் துவக்க விழாவில் கலந்துகொண்ட பிரதிநிதிகள், பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள்.**

ஆனால், நடிப்புக் கலைஞர்களில் அண்மையில் காலஞ்சென்ற திரு சார்லி சாப்ளின் உலகப்புகழ்பெற்ற ஒரு குறிப்பிடத்தக்க கலைஞர் ஆவார். 'திரைப்படத்துறை உலகுக்கு அளித்த ஒரே ஒரு மேதை சார்லி சாப்ளின்' என்று புகழ்பெற்ற நாடக ஆசிரியர் பெர்னாட் ஷா அவர்கள் பாராட்டியுள்ளார்கள். தனது அருமையான பாத்திரப் படைப்புகளின் மூலம் சர்வதேசத் திரைப்படக்கலையரங்கில் கம்பீரமாக பவனி வந்த பெருமைக் குரியவர் சார்லி சாப்ளின். அவர் சித்தரித்துக் காட்டிய நாடோடிப் பாத்திரம் சாகாவரம் பெற்றுவிட்டது. அவர் அமரராகிவிட்டா லும் ஒரு நடிகராக, இயக்குநராக, படத்தயாரிப்பாளராக அவர் புரிந்த சாதனைகள் உலகு முழுவதும் என்றென்றும் நமக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சார்லி சாப்ளினைப்பற்றிப் பேசுகின்றபொழுது, தமிழகத்தில் மிகச் சிறந்த நகைச்சுவை நடிகராக விளங்கிய மறைந்த



**திரைப்படத் திருவிழா '78-ன் துவக்க விழாவில் கலந்துகொண்ட அமைச்சர்கள், பிரதிநிதிகள், பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள்.**

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் என்னுடைய நினைவுக்கு வருகிறார். நாம் இப்பொழுது இந்த விழாவிற்காக கூடியிருக்கிற இந்த அழகான அரங்கம் அந்தக் கலைஞரின் பேரால் கலைவாணர் அரங்கம் என்று அழைக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அறிவு பூர்வமான அவரது நகைச்சுவை கருத்துக்களும் பாத்திரங்களுக்கு உயிரூட்டிய அவரது நடிப்பும் தென்னிந்தியத் திரையுலகில் அவருடைய முத்திரையை அழியாமல் பதித்துவிட்டன. கலை, கருத்துப் பிரச்சாரக் கருவி என்பதில் அமரர் அண்ணாவை கலைவாணர் தன்னுடைய வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருந்தார். இந்த நேரத்தில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றிக் கூறாவிட்டால் நான் எனது கடமையைச் செய்யத்தவறியவன் ஆவேன்.

சமூகமாற்றத்தை உருவாக்குவதற்கு வலிமைமிக்க கருவியாக நாடகக்கலையை — திரைப்படக்கலையை அமரர் அண்ணா அவர்கள் கருதினார்கள். கருதியதோடு மட்டுமில்லாமல் நாடகக்கதைகளை — திரைப்படக்கதைகளை உருவாக்கினார்கள். ஆற்றல்மிக்க எழுத்துவலிமையால் புதிய சமுதாயத்தை உருவாக்க கலைத்துறையின் மூலம் அஸ்திவாரமிட்டார்கள். அப்படிப்பட்ட தூய பணிக்கு கலைஞர்களை உருவாக்கினார்கள். அதன்மூலம் கலைஞர்கள் மக்களிடையே பாராட்டுகளை மட்டுமின்றி, பெருஞ்சிறப்புக்களையும் உயர்ந்த மரியாதைகளையும் பெற்றார்கள். அரசியல்வாதிகள் கலை உணர்வுபெற்ற கலைஞர்களாகத் திகழவேண்டும் என்ற புதிய தத்துவத்தை உருவாக்கி தமிழகத்தில் வெற்றிபெற வைத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இத்தகைய பெரியவர்களை நினைவு கூர்வதன் மூலமாக திரைப்படத் துறையின் சக்தியினையும் நம்மால் நினைவு படுத்திக்கொள்ள முடிகிறது. ஆகவே இந்தத் துறையின் சமூகத் தேவையை யாரும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. திரைப்படத்துறையை ஒரு கலை என்று சொன்னாலும் தொழில் ரீதியாக தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அது இயங்க வேண்டி உள்ளது. சமூகப் போக்குகளை உருவாக்குவதில் திரைப்படம் பெரும்பங்கு வகிப்பதால் இதில் சம்பந்தப் பட்டவர்களுக்கு மகத்தான சமூகப் பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. அவைகளை நாம் புறக்கணித்துவிட முடியாது. வியாபார நோக்கங்களுக்கு பழுது ஏற்படாத வகையில் இத்துறையின் கலை அம்சத்தை, பயனை, எப்படிக் கட்டிகாப்பது என்பது நம்முன் உள்ள மிகப்பெரிய பிரச்சினையாகும். இங்கு வந்திருக்கின்ற பிரதிநிதிகள் இதுபற்றி எல்லாம் விவாதித்து நல்ல முடிவுகளுக்கு வந்து இந்த கலைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயன்படும் வகையில் ஆலோசனைகளை கூறவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளைப்பற்றி எல்லாம் சிந்திக்கும்பொழுது கலை என்று எதைச் சொல்லுகிறோம் என்கிற கேள்வி தானாகவே பிறக்கிறது. கலை என்பதற்கு பலரும் பலவிதமாக இலக்கணம் சொல்லி இருக்கிறார்கள். கலை என்பதை இதுதான் என்று அறுதியிட்டு

## உலகம் முழுவதும் திருக்குறள் பரவ வேண்டும்!

“திருக்குறளைத் தமிழ் வேதம் என்று கூறலாம்! மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாக திருக்குறள் உள்ளது. அந்தக் கருத்துக்களை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

“திருக்குறளின் மேன்மையை மகாத்மா காந்தி அடிகளே படித்துப் புகழ்ந்துள்ளார். போப் அய்யரின் மொழிபெயர்ப்பைக் காந்தி அடிகள் வாசித்திருக்கிறார்.

“திருக்குறளை உலகம் முழுதும் பரப்ப வேண்டும்.”

இவ்வாறு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த திருவள்ளுவர் திருநாளுக்குத் தலைமை வகித்து மேதகு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் கூறினார்.

வரையறுப்பது சற்று கடினம் என்றாலும் கலையின்மூலம் எதை உணர்த்த வேண்டும், எப்படி அந்த உணர்வை வெளியிட வேண்டும் என்று வரையறை செய்துவிடமுடியும். “நாகரீகம் என்பதே ஒரு கலை வடிவம்தான். வெற்றிபெற்ற, சந்தர்ப்பங்களால் விளைந்த கலைவடிவமாக அது இருக்கலாம். என்றாலும், நாகரீகம் ஒரு கலை வடிவம்தான்” என்று ஒரு பெரியவர் குறிப்பிட்டுள்ளதாக நான் படித்திருக்கிறேன். அப்படியானால், பல்வேறு கலை அமைப்புகளே, நாகரீகத்தை உருவாக்குகின்றன என்பது தெளிவாகிறது. இந்தக் கோட்பாட்டினை நீங்கள் ஏற்றுக்கொண்டால் சக்தி வாய்ந்த கலையான திரைப்படத்துறை, மக்களின் வாழ்க்கையோடு இணைந்து உருவாகும் மிக உன்னதமான கலை வடிவம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவேதான், இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் சமூகப் பொறுப்பு மகத்தானது ஆகிறது. உங்களின் கலைப்படைப்புகள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையை மாற்றவும், உயர்த்தவும் பயன்படும் ஒரு சாதனமாகும் என்பதை நீங்கள் உணர்ந்து செயல்படவேண்டும். உதாரணமாக, இந்தியாவின் விடுதலையைப் பெற்றுத்தருவதற்காக போராட சத்தியவழிகளை கடைப்பிடிக்கவேண்டுமென்ற உணர்வை உத்தமர் காந்தி அடிகளுக்கு ஏற்படுத்தியது “அரிச்சந்திரா” என்ற ஒரு நாடகம்தான். ஆகவே நீங்கள் எதைச்செய்தாலும் மிகுந்த கவனத்தோடும், கடமை உணர்வோடும் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். இங்கே கூடியுள்ள திரைப்படத் துறை கலைஞர்கள் அனைவரும் இந்தக்கலையை வெறும் வர்த்தக நோக்குடன் மட்டும் அணுகாமல் மனித சிந்தனையை உன்னதப்படுத்துவதற்கும், வாழ்க்கை அனுபவங்களை முழுமையாகத் துய்ப்பதற்கும் அடிப்படையாக அமைந்த கலைவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் என்கிற உயர்ந்த நோக்கத்தோடு செயல்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். ஜெர்மானிய தத்துவக் கவிஞரான கோதே (Goethe) “மகத்தான உண்மையின் உருவகத்தைத் தோற்றத்தின்மூலம் செய்து காட்டுவதுதான் கலையினுடைய பெரும் பிரச்சினையாகும்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

திரைப்படத் துறையின் முன்னால் உள்ள பிரச்சினையும் இதுவே ஆகும். திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு இது ஒரு சவால் மட்டுமல்ல; அருமையான வாய்ப்பும் ஆகும். இந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் வியாபார நோக்கம் கொண்ட தொழிலாக மட்டும் இதில் ஈடுபடவில்லை. ஏனெனில் ஒரு திரைப்படத் தயாரிப்பாளரோ அதனோடு தொடர்புகொண்ட கலைஞர்களோ பொருளாதார இலாபம் கிடைத்துவிட்டால் மட்டும் திருப்தி அடைவதில்லை. மக்களின் பாராட்டைத்தான் திரைப்படக் கலைஞர்கள் பெரிய இலாபமாகக் கருதுவார்கள். மனித சிந்தனையை உன்னத நிலைக்கு உயர்த்துகின்ற, மனித வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்குகின்ற, ஒரு சிறந்த கலைத்துறையில் முழுமனதோடு ஈடுபட்டிருக்கிறீர்கள் என்கிற உணர்வை உலகெங்கும் பரவிக்கிடக்கின்ற மக்களுக்கு உணர்த்துகின்ற முறையில் உங்கள் பணி சிறக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

நன்றி.

வணக்கம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

—அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.